கலை, இலக்கியத் திங்கள் இதழ்


# கலைச்சுடர்

யூலை 1973

கண் : 2 | பிரமாதீசஹு ஆடிமீ 8உ (23-7-73) | ஒளி : 3

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு." — திருக்குறள்

# இலக்கியத்தின் உயிரும் உடலும்



சித்தாந்த சாகரம் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

**உயிர்**

இலக்கியத்துக்காயினும், தனிக் கவிதைக்காயினும் அது முகந்து கொண்ட பொருளே அதன் உயிர். தாதுக்களாலான உடல், உயிருக்கு இடமாய் இருப்பது போலச் சொற்களாலான செய்யுள் பொருளுக்கு இடமாய் இருத்தல் வேண்டும் என்கிறது இலக்கணம்.

உயிருள்ள உடலே இயங்கும்; நிலைக்கும். அவ்வாறே பொருளுள்ள இலக்கியங்களே, கவிதைகளே வழங்கும்; நிலைக்கும். பொருளற்றவைகள் பிணங்கள். அவைகள் கால வெள்ளத்துட் கரந்து, இருந்த இடமும் தெரியாமற் பெயரும் வழங்காமல் மறைந்துபோகும்.

கழிந்த கால வெள்ளத்தை ஒருமுறை திரும்பி நின்று நோக்கினுல் வெகு தொலைவில் ஒரு கம்பன் தோன்றுகிருன். இன்னும் வெகு தொலைவில் ஒரு திருவள்ளுவர் பிரகாசிக்கின்ருர். அமரத்துவம் படைத்தவை மிகச் சிலவாய்த் தோன்றுகின்றன. கால வெள்ளத்துட் கரந்தவை எத்தனை!

உயிருள்ளவையே தலைகாட்டுகின்றன; வெள்ளத்தால் அழியாமல், வெந்தழலால் வேவாமல் காலத்தை வென்றுநின்று நிலவுகின்றன. இலக்கியங்களுக்கும் கவிதைகளுக்கும் உயிரே பிரதானம். அந்த உயிர்ப் பொருளை நாம் தீண்டலாமா? கண்டு, கேட்டு, உண்டு உயிர்க்கலாமா? இதனை இனிச் சற்றே சிந்திப்போம்.

விஞ்ஞானி ஒருவன் உயிரோடு கூடிய ஓர் உடலைப் பிளக்கின்ருன்; பரிசோதனங்கள் நடத்துகின்ருன். உடலுட் குடியிருந்த நுண்ணிய வாயுக்களைக் கண்ணுடிக் கூண்டுகளுள் அவனுல் அடைத்தல் கூடும். உடலை இயக்கிக் கொண்டிருந்த உயிரை மாத்திரம் அவனுல் பற்ற முடிவதில்லை. அதனுலே உடலுள் உயிரென்ற ஒரு பண்டம் இல்லையென்று கூடச் சொல்லுவதற்குச் சிலர் முன்வரலாம். இலக்கியங்களுக்கோ, கவிதைகளுக்கோ உயிர் இல்லையென்று மாத்திரம் யாருஞ் சொல்லுவதில்லை. இலக்கணங்களென்றும் நிகண்டுகள், அகராதிகளென்றும் பதவுரை, விசேஷ உரைகள் விமர்சனங்களென்றும் எத்தனையோ ஆயுதங்கள் இலக்கியங்களை— கவிதைகளைப் பிளந்து உயிரைக் கண்டு பிடிப்பதற்குச் சேகரம் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தப் பழைய புதிய ஆயுதங்களால் உயிரைப் பற்றுதற் பொருட்டு இலக்கியங்கள், கவிதைகள் சித்திரவதை செய்யப்பட்டு வருகின்றன. உயிரைப் பற்றுவது எளிதிற் சித்திப்பதாயில்லை. ஒரு கவிதையை எடுத்துக்கொண்டு அதனைத் தனித்தனி பதங்களாகப் பிரித்து ஒவ்வொரு பதத்துக்கும் நுண் பொருள் உரைத்து, அவ்வாறு உரைத்தற்கு வேறு வேறுநூல்களில் மேற்கோள்கள் காட்டி, இலக்கண வரம்புகளுங் கூட்டிப் பார்க்கின்ருர்கள். இந்தச் செயற்கருஞ் செயல்களால் கவிதை உயிர் தாங்காது இறந்துபடுகின்றது; உயிரைப் பற்றுவது அரிதாகின்றது.

இலக்கியங்களைக் கவிதைகளைச் சித்திரவதை செய்கின்றவர்கள் தாங்கள் அவற்றைச் சுவைக்கின்ருர்கள என்று பாவனைகளும் பண்ணுகின்ருர்கள். அவர்கள் பண்ணும் சுவைப் பாவனை, முதலை, புங்கம் வேரை நரியின் காவென்று சுவைத்த பாவனையோ அப்படியன்றி உண்மையான பாவனை தானே என்பதைச் சற்றே பொறுமையுடன் ஆராய்வோம்.

ஆசிரியர் தொல்காப்பியனுர்,

"முதல்கரு உரிப்பொருள்
என்ற மூன்றே
நுவலுங் காலை
முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை
நாடுங் காலை"

"இலக்கியவுலகிலே சம்பவத்தின் நிகழ்வு நிகழாமை முக்கியமன்று, எடுத்துக் கொண்ட உரிப்பொருள்தான் முக்கியம். அந்த உரிப் பொருள் பொருத்தமான உடலில் அமைக்கப்படுமாஞல் அது பிரகாசித்துப் பயன்படும்."

என்ற சூத்திரத்தில் செய்யுள் முகந்து கொள்ளும்பொருளை முதல், கரு, உரி என்று மூன்ருக வகுத்திருக்கின்ருர்.

"முதல், கரு, உரிகள் முறை சிறந்தனவே" என்று சூத்திரத்தை இன்னும் சுருக்கி வைத்துக்கொளளுவோம்.

இலக்கியங்களுக்கும் கவிதைகளுக்கும் உரிப்பொருளே உயிரான பொருள் சிறந்த பொருள். இந்த உரிப்பொருளை எடுத்து வளர்க்கிற பொருள் கருப் பொருள உரிக்குக் கரு செவிலித்தாய். முதற் பொருள் உரிக்குத் தந்தையும், தாயுமாய் இருக்கும்.

முதற்பொருள் காலமும், இடமும் என இருவகைப்படும். ஒரு விசேட காலத்திலே பொருத்தமான ஓர் இடத்திலே மாசு நீங்கிய புலமையுள்ளத்திலே ஒரு நல்ல இனிய உணர்ச்சி உண்டாகலாம். அந்த மறுவற்ற உணர்ச்சியே உரிப்பொருள். அது பேணற்பாலது; உருவம் இல்லாதது. புலவன், உருவமற்றதும் நல்லதும் இனியதும் ஆன அந்த உணர்ச்சியைக் கருக்கட்டிக் கருப் பொருள்கள் மூலம் புலப்படுத்த முயல்கின்ருன். இதனை ஓர் உதாரணத்தில் வைத்து நோக்குவோம்.

'அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்' என்பது எல்லாரு மறிந்தது. அன்பு இருவேறு பொருள்களை ஒருபொருள் செய்வது; ஒன்ருக்குவது. இப்படிப்பட்ட அன்பை 'காதல் இருவர்' கருத்தொருமித்த ஆதரவு என்கிருர் ஒளவையார். அன்பர்களுக்குக் கருத்து ஒன்றே; இரண்டில்லை.

மாசு மறுவற்றதும் கருத்தை ஒன்று செய்வதுமான ஆதரவு எப்படியிருக்கும் என்று ஒரு புலவன் சிந்திக்கின்ருன். தனிக் கவிதைகளின் தொகுதி, 'குறுந்தொகை' என்ற சங்க இலக்கியம். அந்த இலக்கியத்திலே தான் இந்தச் சிந்தனை வருகின்றது. பரிசுத்த ஆதரவு எப்படியிருக்கும் என்பது தான் அந்தச் சிந்தனை.

ஒருநாள் ஏற்ற ஓர் இடத்தில் புலவனுடைய சிந்தனை முற்றுப் பெறுகின்றது. அதனுல் புலவனுக்கு மெய்ப்பாடு பிறக்கின்றது. முற்றுப் பெற்ற சிந்தனையான அந்த நல்ல உணர்ச்சியைக் கருக்கட்டப் புலவன் முயல்கின்ருன். அவன் முயற்சியின் வருமாறு அமைகிறது.

பளிங்குபோன்ற பரிசுத்த உள்ளம் படைத்த இளம் தம்பதிகள் அவர்களுக்கென்று அமைத்த தனித்த மாளிகையில் இல்லறம் என்ற நல்லறம் நடத்துகின்ருர்கள். அவனுக்கு வயசு பதினுறு. அவளுக்கு வயசு பன்னிரண்டு.

இவளைப் பெற்ற தாய் தன் இளம் பெண்ணை நினைந்து ஏங்குகின்ருள். விளையாட்டுக் குழந்தை எங்கே! இல்லறம் எங்கே! கணவனுடன் கருத்தொருமித்து நடக்க இவள் கற்கவில்லையே என்று கலங்குகின்ருள். பெற்ற தாயின் கலக்கத்தை நீக்கும் பொருட்டு, வளர்த்த தாயாகிய செவிலி இளம் தம்பதிகளின் மனைக்குச் செல்கின்ருள். சென்றவள் அங்கே கண்டது இது.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## கலைசமைப்போம் உயர் நிலை அமைப்போம்

பிரமாதீசஹூ ஆடிமீ 8உ (23-7-73)

## பார்வை

### நாகரிகம்

நாகரிகம் என்ற சொல் மிகவும் தொன்மை வாய்ந்த சொல். சங்க இலக்கியத்திலும், திருக்குறளிலும் இச் சொல் காணப்படுவதே இதன் தொன்மைக்குச் சான்று. இச் சொல் எல்லோராலும் விரும்பப்படுவதாயும் கவர்ச்சி வாய்ந்ததாகவும் இருந்து வருகின்றது. தாங்கள் நாகரிகம் மிக்கவர்கள் என்று சொல்லிக் கொள்வதில் எல்லா இனத்தவர்களும் பெருமைப்படுகிறார்கள்.

இன்று நாகரிகம் என்று மக்கள் பேசிக் கொள்வது உடை, அணி, வீடு, வாசல் போன்ற புறநிலைகளையே. நாகரிகம் மிக்கவர் என்று ஒருவரை மதிப்பிடுவதும் அவரது புறத்தோற்றத்தைக் கொண்டே.

ஆயினும் இலக்கியங்கள் நாகரிகம் என்று கூறுவது உளப்பண்பையே. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பாடலைப் பாடிய கணியன் பூங்குன்றனாரின் உள்ளம் நாகரிகத்தின் சிகரத்தில் இருந்தது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

நாகரிகம் மிக்கவர்களின் மனம், சொல், செயல் மூன்றும் பண்பட்டவையாகக் காணப்படும். அந்தப் பண்பே பிறர் இயற்றும் எத்தகைய தீமையையும் பொறுக்கும் பண்பாகவும் அமையும் என்பதைத் திருவள்ளுவர் "பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர் நயத் தக்க நாகரிகம் வேண்டுபவர்" என்னும் குறளால் அழகுறக் கூறுகிறார்.

இலக்கிய உலகிலோ அரசியல் உலகிலோ தனி வாழ்விலோ ஒருவன் தான் நம்பும் கருத்தைச் சொல்லுவதற்குச் சுதந்திரம் உண்டு. ஆனால் அந்தச் சுதந்திரம் நாகரிகம் உடையதாக இருத்தல் வேண்டும்.

இலக்கியம் வாழ்வை அழகுபடுத்தும் கலை; பண்பை வளர்க்கும் கலை, என்றெல்லாம் பெருமையோடு கூறி வருகிறார்கள். அத்தகைய இலக்கியத் துறையில் ஈடுபடுபவர்கள் தத்தம் கருத்துக்களைக் காலத்துக்குக் காலம் வெளியிடுவது இன்றியமையாததாகும். புதிய இலக்கியங்கள் பற்றிய கருத்துக்களைத் துணிந்து கூறுதல் வரவேற்கத்தக்கதாகும்.

இலக்கியத்தைப் படைப்பவர்க்கும் அது பற்றிக் கருத்துரை வழங்குவோர்க்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அந்தக் கருத்து வேறுபாட்டைச் சொல்லும் முறையில் நாகரிகம் வேண்டும். இலக்கியத் துறையிலேயே நாகரிகத்துக்கு இடமில்லையானால் அதற்கு வேறு எங்கே தான் இடம் கிடைத்துவிடப் போகிறது?

இலக்கிய சம்பந்தமான கருத்துரைகள் வழங்கப்படுவதன் நோக்கம் இலக்கியத்துக்கு ஆக்கம் தேடுவதாக இருத்தல் வேண்டும். தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை வெளிப்படுத்துவதாகவோ அல்லது தனிப்பட்டோர்மீது கொண்டுள்ள விருப்பு வெறுப்புக்களைத் தாங்குவதாகவோ இலக்கியக் கருத்துரைகள் வழங்கப்படுவது நீதி அன்று. எப்படி இலககியங்கள் கருத்துக்களை வெளியிடும்போது நாகரிகத்தைப் பேணுகின்றனவோ அப்படியே இலக்கியம்பற்றிய கருத்துககளை வெளியிடுவோரும் நாகரிகத்தைப் பேணவேண்டியது இன்றியமையாதது.

தமிழ் உலகின் தவப்பெரும் புதல்வர் ஆகிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் இலக்கியம் பற்றிய சிந்தனைக் கட்டுரை இந்த இதழில் இடம் பெறுகிறது. அறிஞர் க. சி. குலரத்தினம் அவர்களின் ஆங்கிலப் புலமை என்னும் ஆய்வுக் கட்டுரை சுவையும், கருத்தும் கலந்து விளங்குகிறது. நாவேந்தன் அவர்களின் உணர்ச்சியும், கற்பனையும் கலந்த சிறுகதை இடம் பெறுகிறது. திரு. த. சண்முகசுந்தரம் அவர்களின் "கலைமரபு" பேட்டிக் கட்டுரை சிறப்பாக ஆராய்ச்சியாளர்க்கும், பொதுவாகப் பலர்க்கும் விருந்தாக அமைகிறது. செந்தமிழ்மணி பொன். கிருஷ்ணபிள்ளை அவர்களின் இனிய கட்டுரையும், பிற விடயங்களும் இவ் இதழுக்குப் பொலிவூட்டுகின்றன.

# கலையும் மரபும்

## 2. குருநாதரின் ஆசி

என் குருநாதரின் அன்பு அன்றுதான் எனக்குத் தெரிந்தது. சிட்சையின்போது நான் தவறு செய்தால் நாகம்போலச் சீறுவார். அப்படியான அவர் இப்படிப் பேசுகிறாரே என்று எனக்குள் வியந்தேன். வேறு ஒருநாள் என்னை அழைத்து உனது அடக்கமான குணத்திற்கும் புத்திசாதுரியத்திற்கும் யாழ்ப்பாணத்தில் நீ முதல் தரமான வித்துவானாக விளங்குவாய். ஏன் இங்கு தமிழ் நாட்டிலே தங்கினால் என்ன? இங்கே நிரந்தரமாக வசிக்கலாம்'', என்றார். இப்போதையைப்போல அப்போது குடியுரிமைப்பத்திரம், புகைப்படம் எல்லாம் தேவையில்லை. நான் முதன் முதலாக யாழ்ப்பாணத்திலிருந்து திருவண்ணாமலைக்குப் பாய்க்கப்பலிலே போய் வந்தேன். ''நிரந்தரமாக இங்கு வசிப்பதற்குத் தமையனாரும் தாயாரும் அநுமதிப்பார்களோ''? என்றேன். என் விருப்பத்திற்கு மாறாக என் குருநாதர் எதுவும் பேசவில்லை. முருகன் கருணையும் மூத்த தமையனாரின் சிட்சையும் அன்பும் தாயாரின் பாசமும் குருநாதரின் அருள்வாக்கும் தான் என்னை இந்நிலைக்கு உயர்த்தியன என்பது என் நம்பிக்கை. என் குருநாதர் மறைந்தார். அவர்தானே என்னை எடுப்புப் பிள்ளையாகப் போற்றி வளர்த்தார். அவருடைய உறவினர் ஒருவர் என்னைப் பாாத்து, ''பிள்ளையில்லாத இடத்துப் பிரதம சிடன் கொள்ளிக்கடன்செய்யலாம். இதுதான் குருகுலக் கல்வியின் மரபு,'' என்றார். அப்படியே கொள்ளிக்கடன் செய்து முடித்தேன். அதிலே பெரியதொரு திருப்தி.

தாய்நாடு திரும்பினேன். தொடக்கத்திலே மூத்ததமையனாருடன் சேர்ந்து வாசித்தேன். பின்னர் தனித்து வாசிக்கத் தொடங்கினேன். என் திறமைக்கேற்ப நிறையச் சேவகம் வரத் தொடங்கியது. வருவாயும் பெருகியது. என்னுடன் பாடங் கேட்டவர்களுள் முக்கியமானவர்கள் தம்பியார் நடராசா, யாழ்ப்பாணம் சோ. அப்புலிங்கம், அளவெட்டி அ. இரத்தினவேல் (இப்போதைய வித்துவான் கேதிசுரனின் தந்தை), மல்லாகம் இ. இராசு, கரம்பன் சு. நடராசா, பருத்தித்துறை க. நடராசா, அளவெட்டி கோபாலகிருஷ்ணன், மல்லாகம் சுப்பிரமணியம், மாவிட்டபுரம் இ. ஞானசுந்தரம், அளவெட்டி சொ. மங்களம், மாவிட்டபுரம் ப. சக்திவேலு, இணுவில் வே. சுப்பிரமணியம் என்பவர்கள். தொழிலில் நன்கு முன்னேறவே இந்தியாவிலிருந்து தவில் வித்துவான்களை அழைக்கத் தொடங்கினேன். அவர்கள் இங்கு என்னுடன் இருந்து சேவித்தார்கள். இவர்களில் முக்கிய மானவர்கள் திருமங்கலம் சுந்தரேசன், மன்னார்குடி நடேசன், காரைக்கால் சோமசுந்தரம், குலசேகரம் நாராயணசாமி என்போர். முன்னுக்கு வரக்கூடிய எமது இளம் தவில் வித்துவான்களை இவர்களுடன் சேர்த்து வாசிக்க வைத்துள்ளேன். இப்படி முன்னேறியவர்கள் கா. கணேசு (பெரிய கணேசு), இணுவில் சின்னத்தம்பி போன்றவர்கள்.

''எனது சாதனைகளுக்கு உறுதுணையாக அமைந்துள்ளார் எனது பாரியார். இவர் முன்னர் குறிப்பிட்ட மாமனார் சாம்பசிவத்தின் அருமை மகள் யோகாம்பாள். 1927ல் எமது திருமணம் நடந்தது. எனக்கு ஆண் குழந்தைகள் இல்லை. இருவரும் பெண்கள். மூத்தவர் திருமதி கந்தவசீகரி சிங்கராசா, இளையவர் திருமதி தர்மவதி குமாரசுந்தரம். எமக்குத் தொழில் இசை; முருகனைச் சேவிக்கும் இசை. எனவே எனது புதல்விகளுக்கு முறையாக இசை பயிற்றித் தரமுள்ள இசை ஆசிரியைகளாக்கியுள்ளேன். என்னுடைய இசை அநுபவங்களைக் குறிப்பிடுவது தற்புகழ்ச்சியாகும்''. என்று அடக்கமுடன் பேச்சை முடிக்கப் பார்த்தார்.

''சரி, நீங்கள் மறக்கமுடியாத நிகழ்ச்சி எது?'' என்று கேட்டேன். இந்தக் கேள்வியைக் கேட்டதும் அவரின் முகத்திலே ஒளி கூடியது.

த. சண்முகசுந்தரம்
B. A. (Cey.) Dip. in Ed. (Cey.)

''என் வாழ்விலே மறக்க முடியாத நிகழ்ச்சி நான் மாவை ஆதினத்திலே தங்க நாயனம் போட்டதுதான், நானா போட்டேன்? முருகன் தான் போடுவித்தான். 1939இல் அந்தப் பெருமை எனக்குக் கிடைத்தது. அப்பொழுது ஆதீனகர்த்தாவாக இருந்த சாமிக்குருக்கள் சுப்பிரமணியக் குருக்கள் (இரத்தினக் குருக்கள்), இப்போதைய ஆதீனகர்த்தா து. துரைச்சாமிக் குருக்கள் ஆகியோர் இதற்காக முன்னின்று முயற்சி செய்தவர்கள். இந்த அந்தணர் திலகங்கள் என் மீதும் என் வித்தைமீதும் ஆசியைப் பொழிந்துள்ளனர். இவர்களைத் தவிர கா. குமாரசுவாமிக் குருக்கள் (செல்லக் குருக்கள்), சபாபதிக் குருக்கள் (அப்பாக்குருக்கள்), பி. ஐயாசாமிக் குருக்கள் போன்றவர்களின் அன்பும் ஆதரவும் எனக்கு எப்போதும் உண்டு. தங்கத்தாலே நாயனம் ஒன்றை எனக்கு அன்பளிப்புச் செய்தனர். அன்பர்களும் ஆதரவாளர்களும் சூழ அதனைத் திருவிழா நாளன்று முருகன் பாதாரவிந்தத்தில் வைத்துப் பூசையாக்கி எனக்குக் கையில் ஆசியுடன் வழங்கினார் இரத்தினக் குருக்கள். அன்று கச்சேரி செய்தேன். ஆனந்தக் கண்ணீர் முதலில் என்னை நிலைகுலையச் செய்தது. இரசிகர்களின் பாராட்டிற்கோ குறைவில்லை. மாவைக் கலைஞன் ஒருவனுக்குக் கிடைக்கக்கூடிய மிகப் பெரிய பேறு இது. தங்க நாயனம் போடும் பாரம்பரியம் இப்போது மறைந்துவிட்டது. என் செய்யலாம்?

என் மூச்செல்லாம் முருகனுக்கே. சேவகம் தவிர்ந்த நேரம் புல்லாங்குழல் வாசிப்பேன். என் இளமையில் இதனை நன்கு கற்றேன். பல வாத்தியங்களைக் கையாள்வதால் வித்தை வளரும் என்பது என் மூத்ததமையனாரின் கருத்து. ஆண்டுதோறும் காங்கேசன்துறை நடேசுவராக் கல்லூரியில் சரசுவதி பூசையிலே முழுநேரப் புல்லாங்குழல் கச்சேரி செய்துள்ளேன். மாவை ஆதினத்தில் அர்த்தசாமப் பூசையில் வெள்ளியும் செவ்வாயும் புல்லாங்குழல் வாசித்துச் சேவித்துள்ளேன். எனக்கு முருகன் கருணையுண்டு. வாழ்வளிக்கும் இசை என்னைப் பொலிவுடன் வாழவைத்துள்ளது. மனப் பொலிவைத்தான் குறிப்பிடுகின்றேன்.

யாழ்ப்பாணத்து நாதசுரப்பாணியில் முன்னிற்பவர்கள் நின்றவர்கள் எல்லோரும் எமது பரம்பரையினர். எமது ஆதீனத்தைச் சேர்ந்தவர்கள். எனக்கு மூத்தவர்களான இருவரைப்பற்றிக் கூறியுள்ளேன். இன்னும் இருவரைக் குறிப்பிடத்தான் வேண்டும். அவர்கள்தான் சு. குழந்தைவேல், S. வைரவநாதர். எனது காலத்தில் பெரும் வித்துவானாகத் திகழ்ந்த கே. இராசாவின் தமையனார், குழந்தைவேல் கற்றுத் தேறிய இசைவல்லாளன். சபையைத் தனது காந்தசக்தி வாய்ந்த வித்தையால் கவர்ந்தவர். அண்மையில் காலமானார். எமது காலத்து ஆதீன வித்துவான்கள் பலர் என் நினைவில் வருகின்றனர். அவர்கள் கோ. அப்புலிங்கம், கே. இராசா, முத்துக்குமாரு விசுவலிங்கம் ஆகியோர். இவர்கள் நாயனப் புலவர்கள், தவில் வித்துவான்கள் பலரைச் சொல்லலாம்.

''இன்றைக்கும் எமது ஆதீனப் பரம்பரையைச் சேர்ந்த இளம் வித்துவான்களையிட்டுநான் பெருமைப்படுகின்றேன்; நாதசுர இசையில் வித்துவான்கள் க. பத்மநாதன், ச. சண்முகநாதன், செ. சிதம்பரநாதன், இ. கேதீசுவரநாதன் என்போர் புகழுடன் திகழ்கின்றனர். தவிலில் வி. தெட்சணாமூர்த்தி, பொ. கணேசு (நாச்சிமார் கோவிலடி) இ. சின்னராசா, ச. இராசகோபால், கு. பழனிமலை, பொ. பழனிவேல் (சின்னப்பழனி), ப. குமாரசுந்தரம், இ. பாலகிருஷ்ணன் போன்றவர்கள் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றனர். இவர்கள் எல்லோரும் எனது உறவினர்கள். இரசிகர்களின் புகழ்மாலை இருக்கும்போது என் புகழ்மாலை இவர்களுக்கு எதற்கு? இவர்கள் எலலோரும் குருகுல முறைப்படி கற்றவர்கள். எனது மூத்த தமையனாரின் மகன் ப. குமாரசுந்தரம் (தவில் வித்துவான்) நாச்சிமார் கோயில இராசப்பிள்ளையிடம் சிட்சைசெய்தவர். எமது காலம் மாறுகின்றது; நாகரிகம் மாறுகின்றது. எமது இசைப் பரம்பரை அடுத்த தலைமுறையில் எப்படி அமையுமோ என்பதுதான் என் கவலை. அதற்கும் முருகன் வழிகாட்டுவான்'' என்று பேச்சை முடித்தார்.

''வயது வந்தாலும் வாத்தியத்தைக் கைவிடேன்'', என வாழ்கின்றார் தாத்தா உருத்திராபதி. அடக்கமாக வாழ்கின்ற அவருக்குப் புகழ் தானாகவே வந்து சேர்ந்துள்ளது. வாய்ப்பாட்டை நன்கு சொல்லிக் கொடுப்பார். இவர் உருவாக்கிய இளம் கலைஞர்கள் பலர். இவரின் மாணவர்கள் சங்கீத வித்துவான்களாகவும் இசை ஆசிரியர்களாகவும் இலங்கையின் பலபாகங்களிலும் இருக்கின்றனர். சென்னை அண்ணா

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

# ஒளியின் பின்னே......!

சிறுகதை

என்னவெல்லாமோ 'மனக் கோட்டை'களைக் கட்டிக்கொண்டு வாழ்வுப் பாதையில் அடியெடுத்து வைத்த எனக்கு இருந்த ஒரேயொரு, கடைசி நம்பிக்கையும் போய்விட்டது. சுற்றிவர எந்தவிதமான சன நெருக்கமுமற்ற அந்த வெளியான பிரதேசத்தில் எனது சாதாரணமான வீடு, மிகவும் அசாதாரண நிலையில் அழுது வடிந்துகொண்டிருக்கிறது. வேதனையால் எனது மனம் புண்ணாகிக் கண்ணீராகச் செந்நீர் சிந்திக்கொண்டிருக்கிறது.

'வாழ்க்கை என்பதே ஒரே மாயந்தான்.........!'

இன்று அமரராகி, சாம்பராகி, என் மனச் சிறைக்குள் மட்டும் 'உயிரும் உடலுமாய்' உலாவுகிற அவருக்குப் பிடிக்காத வார்த்தை இது! ஆனால் என்னைப் பொறுத்தவரை இன்று உண்மையாகிவிட்டதே!

அப்பொழுதே சொன்னார்கள்! "இவனுடைய மயக்கும் விழிகளிலும், ஆளை இழுக்கும் பேச்சிலேயும் மருண்டுபோய் சாதிவிட்டுச் சாதி கலியாணம் பண்ணிறை. உன்ரை எதிர்காலம் எப்படிப் போகுமோ..... !"

அந்த வார்த்தைகளை நான் இன்னும் மறந்துவிடவில்லைத்தான். அவருடைய அந்த விழிகளும் பேச்சும், ஏன் முழு உயிரும், உடலுமே எனக்குள்ளேதானிருக்கு.

எவரிடமும் எப்படிச் சொல்லியும் தீரக்கூடிய சோகமா இது! இல்லை; நான் மனம்விட்டுச் சொல்லியாறத்தான் யாரிருக்கிறார்கள்?

எனக்குக் கோபம் வந்தாலும், சந்தோஷம் வந்தாலும் எப்போதும் இப்படித்தான் சொல்லுவார். "தங்கம் சாவைப்பற்றிப் பயப்படாதவன் நான். ஆனால் சாதாரண மனிதனுக்கு வருகிற சாவு எனக்கு வரக்கூடாது, வர முடியாது. ஒரு நொடிக்குள் சிவப்பிரகாசம் 'சிவமாகி' விட்டார் என்று நம்மவர்கள் பேசவேண்டும் என்பதற்காகவல்ல. அப்படி ஒரு சாவுதான் எனக்குச் சித்திக்கும்! நீ வீணாக அலட்டிக்கொள்ளாதே!"

அப்பொழுது தொட்டே எனக்கு உள்ளூரப் பயந்தான். அந்த மனிசன் ஒரு ஆளையோ, சம்பவத்தையோ பற்றி எடுத்த எடுப்பில் விமர்சிக்கிற விடயங்கள் நாளாவட்டத்தில் நடந்தேவிடுகின்றன. அதுபோல......., நினைக்கவே நெஞ்சம் துடிக்கும். பண்ணாத பிரார்த்தனைகளை யெல்லாம் என் மனதுக்குள்ளேயே பண்ணிக் கொள்வேன்!

ஆனாலும் அது நடந்தே விட்டது............!

* * *

அவரோடு நான் ஓடி வந்த காலத்தைக் கணக்கில் மீட்டுப் பார்க்கும்போது இருபத்துமூன்று ஆண்டுகள்; எனக்கு இப்பொழுது நாற்பத்துமூன்று வயது. அவருக்கு நாற்பத்தைந்தோ, நாற்பத்தாறோ இருக்கும். அந்தக் காலத்தில் அவர் செய்த புரட்சி, இப்பொழுது நினைத்தாலும் உடல், உள்ளமெல்லாம் 'சில்'லிட்டுப் போகிறது. தனது சாதிக்காரர் வந்து திண்ணையிலேகூட இருக்க முடியாத, மிகத் 'தாழ்வாக' மதிக்கப்பட்ட சமூகத்திலே பிறந்தவள். என்னை........, என்னுடைய அப்பன் கொஞ்சம் பணம் சேர்த்து வைத்திருந்தமையால் 'கன்வென்டில்' படிக்கவைத்த பேற்றினால் பன்னித் தோழியின் அண்ணனாகவந்து என்னைக் கண்டவர்... அந்த முதற் சந்திப்பிலேயே நான் என்னை அவரிடம் இழந்துவிட்டேன். அந்த இழப்பு எனக்குச் சிரஞ்சீவித்துவமான இன்பமயமான இழப்புத்தான்! அதன் பயன்........?

'கன்வென்ட்' படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு இருபத்துமூன்று ஆண்டுகளுக்குமுன் ஒரு நாள் அவரோடு ஓடிப்போய்விட்டேன். அப்பொழுது அவர் வவுனியாவிலே ஒரு அரசுப் பள்ளிக்கூடத்திலே ஆசிரியராக இருந்தார். பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கும்வரை அவருடன் வவுனியாவிலே தான் நானும்! ராஜன் பத்து வயதுச் சிறுவனாக இருக்கும் போதுதான் அவருக்கும் யாழ்ப்பாணத்திற்கு மாற்றம் பெறமுடிந்தது. அதுவும் தேசியமயமான காரணத்தினால்! ஓடிப்போன பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகுதான் யாழ்ப்பாணத்து மண்ணிலே நான் கால் வைத்தேன்!

அதற்குள் வவுனியாவில் நாங்கள் இருந்தபோது கேள்விப்பட்டவை.........!

"நான் அவரோடு ஓடிப்போனதும் என்னுடைய ஆட்கள் எல்லாரும், அவன் ஏதோ உயர்சாதிக்காரனெண்டா என்ன கொம்போ? என்னவோ மோகத்திலே கூட்டிக் கொண்டு போயிருக்கான். கொஞ்ச நாளிலே பெட்டை உயிரோடை இருந்தா என்ன என்ன அவமானத்தோடை வருகுதோ! அதிலும்பார்க்க இப்பவே அவளைக் கூட்டிக் கொண்டு வரவேணும்; வவுனியா என்ன கன தூரமோ!

கத்தி பொல்லுகளுடன் காரிலே புறப்பட்டவையாம். அப்புதான் சொன்னாராம், "நான் வளர்த்தவன். பணத்தைச் செலவழிச்சுப் படிப்பிச்சவன்; என் மகள் – அதுவும் 'உயர்சாதிக்காரனோடை தானே' ஓடிப்போயிருக்கிறாள். போகட்டும். ஆனால் அவள் அநாதையாக, அவனால் புறக்கணிக்கப்பட்டுவந்தால் அவளையும் – அவனையும் நான் கவனிக்கிறன். உங்களுக்கு இதிலை அலுவலில்லை. அத்தனை பேரும் 'முணுமுணுத்தபடி' போயிற்றினையாம்.

ஒரு நாள் வவுனியா ஸ்டேசனிலே என்னையும் இவரையும் கண்டுகொண்ட என் உறவுக்காரி ஒருத்தி "கவனமடி இவற்றை 'மயக்கிற கண்களிலும் மருட்டும் பேச்சிலும்' வந்திற்றை. விளக்கிலை விழுந்த விட்டிலாயிராதே!" என்று சொன்ன அறிவு வாசகம், அதுவும் மறக்கவில்லை. ஆனால்.........!

இருபத்துமூன்று ஆண்டுகள்——...

அவருடன் குடியும் குடித்தனமுமாய்.........

இணங்கியும், பிணங்கியும் எங்களிடையே எத்தனையோ சண்டைகள் வந்ததுண்டு; ஆனால் 'சாதிச்சண்டை' வந்ததில்லை. அப்பு செத்துப் போச்செண்டு ஆரோ வந்து சொன்னபோது அவர் நிதானமாக, எந்த உணர்ச்சிக்கும் ஆட்படாமல் நானும் உன்னுடன் வரட்டுமா? என்று கேட்டபோது, வேண்டாம் நான் போறதும் வாரதுமாக வந்து விடுகிறேன் என்று யாழ்ப்பாணத்திற்கு பஸ்ஸிலே போய் வந்தேன்.

செத்துப்போன என் தந்தையைக்கூட ஆறுதலாக இருந்து தரிசிக்க அவர்கள் விடவில்லை. 'ஓடிப்போனவள் ஓடிப்போனவள்' என்ற ஒரே



வாசகம்! அழுது சிவந்த விழிகளுடன் வீடு வந்துவிட்டேன். என நிலையே இதுவானால் அவருடைய உறவுக்காரர், குடும்பத்தினர் பற்றிச் சொல்ல வேண்டுமா.........? யாழ்ப்பாணத்திற்கு வந்ததும் இந்தச் செழுமையான செம்பாட்டு நிலத்திலே பத்துப் பரப்புக்காணி வாங்கி இந்தச் சின்னஞ் சிறிய வீட்டைக் கட்டினார். இது தான் எனக்கும், எங்கள் மகன் ராஜனுக்கும்—அவர் தேடிவைத்த செல்வம் மற்றதெல்லாம்...!

* * *

மனிதருக்குள்ளே அவர் ஒரு தெய்வப் பிறவி என்று அவரைப் புளுகவில்லை நான். சாதாரணமான ஒரு மனிதனுக்கு இருக்கக் கூடிய அத்தனை பலவீனங்களும் அவரிடம் இருந்தன. ஆனால் அவருக்கே யுரித்தான அந்தச் சாமர்த்தியம்.........!

கடவுளே, இவ்வளவு கெதியில் என்னிடமிருந்து அவரைப் பிரிப்பதற்காகவா இத்தனையும் அவருக்குக் கொடுத்தாய்.........?

ஒருக்கால் அவரையும், அவருடைய பழைய மாணவி ஒருத்தியைப் பற்றியும் ஒரு அநாமதேயக் கடிதம் வந்தது. நான் மௌனமாக இருந்துவிட்டேன். சில நாட்களின் பின் 'அவள்' எழுதிய கடிதமே என்னிடம் சிக்கி விட்டது. 'அதுவும் பச்சையாக வருணித்திருக்கிறாள்'. நான் அடிபட்ட புலியாகச் சீறினேன். அவர் ...எப்படி என்னைச் சமாதானப்படுத்தினார் தெரியுமா..? வழுக்கல் நிலங்களிலே விழுதலுமுண்டு, விழாமலிருப்பதுமுண்டு. விழுந்ததற்காக அதே 'கிடையிலே' யாரும் கிடக்கிறார்களா......?

'துரோகம் உனக்கு உயிருள்ள வரை செய்யமாட்டேன்' என்றார். ஆம், முகத்தில் பூசிய பவுடருக்காக—அது பிடிக்கவில்லையென்பதற்காக முகத்தையே கோரமாக்கிவிட முடியுமா ......? நான் அடங்கிப் போய் விட்டேன். அச்சத்தினால்ல, அவரது ஆண்மை—அறிவு—தெளிவு—நிதானங்கண்டு!

போலித்தனத்துக்கு அவரிடம் இடமிருந்ததேயில்லை. அவர் 'குடிக்கிற' விடயம் எனக்குத் தெரியவே தெரியாது. ஒரு நாள் என்றுமில்லாத மாதிரி எவனோ ஒருவன் 'சைக்கிளை' ஓடிவர இவர் பின்னாசனத்திலிருந்து தள்ளாடியபடியே இறங்கியதைக் கண்டு அப்படியே ஓடிப்போய் கட்டிக் கொண்டேன்; அவர் கெக்கட்டமிட்டுச் சிரித்தார். பலமாக மீண்டுஞ் சிரித்தார். ஏதோ மேடையிலே பேசுவது போல எல்லாம் பேசினார். வந்த ஆளுக்கே வருத்தமாகப் போய்விட்டது. மெல்ல சைக்கிளையும் எடுத்துக் கொண்டு நழுவிவிட்டார்.

அடுத்தநாள் இவரைக் கேட்டபோது சிரித்தபடியே சொன்னார். 'கொஞ்சம் ஓவராகிப் போச்சு!' உனக்கு அப்படியாகாமலிருந்தாற் போதும். வந்த மனவருத்தம் அப்படியே மறைஞ்சு போச்சு! இப்பொழுது நினைச்சுப் பார்க்கையில்........?

* * *

கொஞ்சக் காலத்திற்கு முந்தி யாழ்ப்பாணமே இரண்டுபட்டுக் கிடந்தது. ஏதோ ஒரு புண்ணியசேத்திரத்திலே 'தீண்டாச்சாதி' போகக்கூடாது என்று போராட்டமாம். எத்தனையோ கட்டங் கட்டமான போராட்டங்கள் நடந்தன. பெரிய தலைவர்கள், கட்சிப் பிரமுகர்கள் மாநாடுகள், இயக்கங்கள் நடாத்தி முழக்கமிட்டார்கள்.

அந்தச் சாதி வியாதி இப்பவும் அப்படித்தான் இருக்கு! அப்போது இவர் சொன்னார், "இவங்களைக் காட்டிலும் நான் பெரிய புரட்சிக்காரன்!" என்னால் மறுக்க முடியவில்லை.

அவர் இருக்கும்போதும் ஒட்டியுறவாடும் நிலையில் யாருமில்லாவிட்டாலும் இந்த வீடு, ஒரு நூல்நிலையம் போல, பாடசாலைபோல எப்பொழுதும் ஒரே 'கலகலப்புடன்' இருக்கும்; அவரிடம் எத்தனையோ பேர் வருவார்கள்.........!

எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், கலைஞர்கள், அரசியல் தலைவர்கள் தொண்டர்கள் எவரையும் நான் ஏறெடுத்துப் பார்த்தது கிடையாது. அச்சத்தாலல்ல; அவர்களிலும் பார்க்க என்னவர் பெரியவர் என்ற இறுமாப்பால்........!

இன்று அந்த இறுமாப்பில் பேரிடி.........!

மின்னாமல், முழங்காமல், சொன்ன வாசகம் பிழையாமல் அவர் போய்விட்டார். இனி நானும், என் மகனும் இந்தப் பரந்த பிரதேசத்தில் விவரிக்க முடியாத தனிமையுணர்வுடன்.........!

நினைத்து, நினைத்து அழுகிறேன்......!

* * *

அம்மா, அப்பாவைக் கண்டபடி செலவழிக்கிறாரென்று ஏசாதே! அவருக்குப் பின்னால் 'செலவுக்கு' நம்மிடம் எதுவுமே இருக்காது— தகப்பனைப்போல மகனும் 'தீர்க்க தரிசியாக'த்தான் பிறந்திருக்கிறான்; அவர் சேர்த்து வைத்திருக்கிற பத்திரிகை, புத்தகங்களைப் பார்க்கிறபோது என்னால் அழுகையைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. எல்லாப் பக்கங்களிலும் 'சிவப்பிரகாசம், சிவப்பிரகாசம்' என்று தெரிய அவர் எழுதிய கட்டுரைகள், கதைகள், கவிதைகள்.....! அந்தப் படைப்புக்களுடன் அவர் அமரராகிவிட்டார்; நான்..... ! அதோ .........! ராஜன் வருகிறான். அவர் மறைந்து ஒரு நாள் கூட ஆகவில்லை. உதவிக்கு யாருமேயில்லை, எதுவுமேயில்லை. நாங்கள் அநாதைகளாகி விட்டோமா?

ராஜன் பெற்ரோமாக்சுக்கு எண்ணெய் வாங்கி வருகிறான். இருளை அது போக்க உதவலாம்; என்னுளத்தே நிரந்தரமாகக் குடிபுகுந்துவிட்ட துன்ப இருளை.........

அவரின் உதிரத்தின் உதிரமாக வரும் என் மகன்— என்றும் அகலாத அவரின் நினைவுகள்......!

'தம்பி, லைற்றைக் கொளுத்தடா.........!' கண்களில் வழியும் நீரைத் துடைத்தபடியே ராஜன் பெற்ரோமாக்சைப் பற்ற வைக்கிறான்.............

நான் கால் முகம் கழுவிவிட்டு அவரது திருவுருவப் படத்தை வணங்கப்போகிறேன்.........!

(யாவும் கற்பனையே)

நாவேந்தன்

"கலைக்கண்"

தனிப்பிரதி 25 சதம்

சுன்னாகத்தில் தனலக்குமி புத்தகசாலையிலும்

யாழ்ப்பாணத்தில்

சண்முகநாதன் புத்தகசாலையிலும்

பெற்றுக்கொள்ளலாம்

# ஆங்கிலப் புலமை

அறிஞர் க. சி. குலரத்தினம்

**3. எலிசபெத் இராணியின் காலம்**

ஆங்கிலப் புலவர்களின் அரிய இலக்கியப் படைப்புக்கள் பலவும் முதலாம் எலிசபெத் இராணியின் காலத்திலேயே எழுந்தன; அக்காலத்து இலக்கிய வகைகளில் நாடகத்துறை மகோன்னத நிலையை அடைந்தது. மாலோங் என்னும் புலவரும், உலகப் புகழ்பெற்ற ஷேக்ஸ்பியரும் நிகரில்லாத நாடக ஆசிரியராய் இருந்தார்கள். சேக்ஸ்பியர் நாடகத்துறையில் காளிதாச மகாகவியையும் விஞ்சியுள்ளார் என்று இரு கவிகளையும் எடைபோட்டு ஆராய்ந்த அறிஞர் பலர் கருதுவர். அக்கருத்து எங்கள் அளவெட்டி கைலாசபதி ஐயா அவர்களிடமும் இருந்தது.

மாலோங்கும் சேக்ஸ்பியரும் நாடகத்துறைக்கும் அப்பாற்பட்ட இயற்கைப் புலவருமாவர். சேக்ஸ்பியரை இன்னும் ஆராய்ந்தவர்கள் அவர் ஞான்கவிப்புலவருமாவர் எனக் கருதுவர். அவர் சகல கலைத் துறைகளையும் நன்கு கற்றவர். வான சாத்திரம், தத்துவ சாத்திரம் ஆகிய கலைகளிலும் அவர் துறைபோனவர். புராதனகாலத்து மாந்தர்களின் வாழ்க்கை முறைகள் அவர்கள் நம்பிக்கைகள் என்பவற்ருேடு உரோமர் முதலானோரின் வரலாறுகளையும் அவர் நன்கறிந்து நாடகங்களில் நயமாக எடுத்துக் காட்டுகின்ருர். அரசவையைப் பாடும்போது அரசமைப்பையும் தொழிலாளர் பட்டடைகளைப் பாடும்போது தொழில் நுட்பங்களையும் தொழிலாளரின் ஆயுதங்களையும் விபரிக்கின்ருர்.

எலிசபெத் காலத்துப் புலவர்களில் மைக்கல் டிறேற்றன் என்பாரும் ஒருவர். அவர் பொதுமக்களும் புலமையை நயக்கும் வண்ணம் மிகவும் இலகுவான எளிய முறையைக் கையாண்டுள்ளார். அவர் வரலாற்று நிகழ்ச்சிகளைப் பாடல்களில் வரைந்து, பாராட்டும் புகழும் பெற்றுள்ளார். அவர் யாத்துள்ள நீண்ட கவிகள் ஆயிரம் அடிகளுக்கும் அப்பாற்பட்ட நீளமுள்ளனவாய் உள்ளன; அவை இங்கிலாந்தின் வரலாற்றையும் புவியியலையும் எடுத்துரைப்பனவாயும் உள்ளன. நீண்ட கவிகளை யாத்துப் படிப்பவரின் பொறுமையை அவர் சோதித்துள்ளார் என்று கருதும்போது அவருடைய நாட்டுப் பற்றே அவரை அவ்வாறு செய்யத் தூண்டியது எனக் கருதுதல் தகும்.

அக்காலத்தில் வாழ்ந்த இன்னொரு புலவர் சாமுவேல் தானியல் என்பவராவர். அவரும் டிறேற்றனைப் போலச் சரித்திர நிகழ்ச்சிகளைப் பாடியுள்ளார். அவருடைய பாடல்களும் நீளமானவையேயாம். அவர் லாங்கைசயர், யோக் என்னும் இரு இராசபரம்பரையினருக்கு இடையில் எழுந்த உள்நாட்டுக் கலகம் பற்றிய நிகழ்ச்சிகளையே நீண்ட கவியாகச் செய்துள்ளார். அவருடைய வரலாற்றுக் கவிகளிலும் பார்க்க அவர் செய்த எப்பிசில்ஸ் கவி நயங்கள் நிறைந்தன என விமர்சகர் கருதுகிருர்கள். அதில் ததும்பியுள்ள நயங்களைப் பிற்காலப் புலவர்களான வேட்ஸ்வோத் முதலிய புலவர் பெருமக்கள் வெகுவாக நயந்து மகிழ்ந்து பயன் செய்துள்ளார்கள்.

எலிசபெத் இராணி கன்னியாகவே இருந்து அரசு செய்தவர். அதனுலேயே அவருடைய காலத்தில் அமெரிக்காக் கண்டத்தில் குடியேறிய மக்கள் தாங்கள் குடியேறிய பகுதிக்கு வேர்ஜினியா எனப் பொருள்படும் வகையிற் கன்னிநாடு எனப் பெயரிட்டனர். இராணியார் திருமணஞ் செய்யாமல் இருந்தபோதிலும் அவர் காலத்துப் புலவர்கள் பலர் திருமணப் பாடல்கள் செய்யும் வகையிற் சிறந்து விளங்கினுர்கள். அப் பாடல்கள் ஒருவகைச் சந்தத்துக்கேற்ப இயற்றப்பட்டனவாகும். அவற்றைக் கேட்டு அரண்மனையைச் சேர்ந்த மந்திரிமார் வீரர் முதலாய மாந்தர் குதூகலிப்பது அக்காலத்து வழக்கமாகும். அத்தகைய துள்ளல் ஓசையிற் கவிசெய்தவருள் தோமஸ் சம்பியன் என்பார் சிறந்தவராவர் என்பர்.

அக்காலத்துப் புலவர்களுள் யோஸ் டொன் என்பார் இயற்கை விவேகம் உள்ளவர். அவர் திகில் நிறைந்த பிரயாணங்கள் செய்வதிலும், நூல்கள் படிப்பதில் ஆர்வமும், காதல் இரசனையில் பற்றும் உள்ளவர். எனவே தான் அவருடைய போக்கு விசித்திரமானதாய் அசாதாரணமானதாய் இருக்கிறது. அவர் தமது கவிகளை இன்பகரமாய்த் தொடங்கித் துன்பகரமான நிகழ்ச்சியில் முடிப்பதில் இயல்பாகவே நாட்டம் உள்ளவராவர். அவர் மெத்த அழகியதும் சிறந்ததுமான ஒன்றைக் கூறும்போது அதன் உயிர் நீத்த உடலையும் உடன் கூறுவர். அழகிய பெண்களின் கவர்ச்சி வெறும் வெளிப் பகட்டேயாகும். மூக்கும், விழிகளும் அழகாய் இருந்து என்பயன்? அவர்களின் உள்ளே எலும்பும், இரத்தமும் அருவருக்கத்தக்க அமைப்பில் உள்ளன. எனவே அழகான உறுப்புக்களின் உட்பகுதிகளைப் பார்த்தல் வேண்டும் எனக் கூறும் ஒரு வகைத் தத்துவமும் அவர் பாடல்களில் உண்டு. எனவே தான் சிறந்த இலக்கியமேதையும், விமர்சகரும் பெரும் புலவருமான யோன்சன் என்பார் அவரை மானசதத்துவப் புலவர் என்று விமரிசனஞ் செய்கின்ருர்.

"வினையின் வந்தது,
　　　வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கிற்
　　　புலால்புறத் திடுவது
மூப்புவிளி வுடையது
　　　திப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங்
　　　குற்றக் கொள்கலம்
புற்றிடங் கரவிற்
　　　செற்றச் சேக்கை
அவலக் கவலை
　　　கையா றழுங்கல்
தவலா உள்ளந்
　　　தன்பா லுடையது
மக்கள் யாக்கை
　　　இதுவென வுணர்ந்து
மிக்கோய் இதனைப்
　　　புறமறிப் பாராய்"

இவ்வாறு தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்ருன மணிமேகலையில் சாத்தனுர் கூறுவதும் ஈண்டு சிந்திக்கற்பாலதாகும்.

யோன் டொன் ஆரம்பித்த செய்யுள் முறையை அவருக்குப் பின்வந்த புலவர்கள் பலர் பதினேழாம் நூற்ருண்டிலும் கையாண்டுள்ளனர். அவரைப் பெரிதும் மதித்துப் பின்பற்றியவர்கள் அதிகமாகச் சமயப் புலவர்களாயிருந்தனர். அத்தகைய புலவர்களுள் ஜோர்ஜ்ஹேர்பாட் என்பார் கோயில் என்னும் தலைப்பிற் பல பாடல்கள் பாடியுள்ளார். அவர் சாதாரணமாக அநுபவத்தில் அன்ருடு வழங்கும் சொற்களைத் தாராளமாகக் கையாண்டு உள்ள முறை மனசைக் கவரும் தன்மையதாகும் என்பது விமர்சகரின் கருத்தாகும்.

இவ்வாருக இவர்களைப் பின்பற்றிப் பாடல்கள் செய்த ஹென்றிவோகன் என்னும் புலவர் சமய நூல்கள் பல செய்துள்ளார். அவற்றுள் ஞானவொடுக்கம், நான் கண்ட சாசுவதநிலை எனப் பொருள்படும் நூல்கள் மிகவும் உயர்ந்த தரத்தவையாகும். இவருக்குப் பின்வந்த றிச்சாட் கிருசோ என்னும் கத்தோலிக்கப் புலவர் தாம் செய்த கோயிலுக்குப் படிகள் என்னும் நூலில் தமக்கு முன் வாழ்ந்த புலவர்களையும், மறினோ என்னும் இத்தாலியப் புலவரையும் பெரிதும் மதித்துப் பின்பற்றியுள்ளார் என்று அறியக்கிடக்கிறது.

—வளரும்

# அறிந்ததும் அறியாததும்

'மெய்யன்'

**எச்சரிக்கை**

தரையில் நின்றபடி ஒருவன் விழுந்தால் அவனுக்கு அதிக சேதம் ஏற்படுவதில்லை. அவன் மிக உயரத்தில் இருந்து விழும்போது அவனுடைய உயிருக்கும் ஆபத்து உண்டாகின்றது. அதுபோல், ஒருவன் தனது புகழின் உச்ச நிலையை அடையும்போது மிகக் கவனமாக இருத்தல் வேண்டும். இன்றேல் அவன் இவ்வுலகில் வாழ்ந்தும் வாழ்வு இழந்தவனுகி விடுகின்ருன்.

**பருவத்தின் பண்பு**

"சந்ததமும் இளமையுடன் இருக்கலாம்" என்று எழுதப்பட்டுள்ளது. எனவே, என்றும் இளமையுடன் இருக்க விரும்புவதும் மனித இயல்பு; ஆனுல், முதுமை வந்தபோது அதன்பொருட்டு வருத்தப்படுவதும மனித இயல்பே!

**துன்பத்தில் இன்பம்**

இந்த உலகத்தைத் திருத்த என்னுல் முடியவில்லை என்று ஏன்கவலை கொள்கின்ருய்? நீ திருந்தி விட்டாய் என்று இந்த உலகம் உன்னை நினைத்து மகிழ்ச்சி கொள்ள முயற்சிசெய்!

**வேண்டுவன**

அறிவினில் அடக்கம் வேண்டும்.
ஆட்சியில் அன்பு வேண்டும்.
அமைதியில் இனிமை வேண்டும்.

**சிறுமை பெருமை**

சிறியார் செய்யும் சிறிய பிழையைப் பெரியார் செய்தால், அப்பிழை பெரிய பிழையாக மாறும்.

**அன்பின் பண்பு**

அதிகாரம், ஆணவத்தால் ஒருவரை அடக்கி ஆள முடியாது; ஆயினும் அன்பினுல் அவர் அடிமையாக்கப் படுவர்.

**உண்மை அளவுகோல்**

உனது உதட்டின் கருத்து உனது உள்ளத்தின் ஆழத்தை உடன் அளந்து காட்டும்.

**ஒரேயொரு உதவி**

கடவுளே! கடவுளே! என்று உன் வாழ்வின் நலனுக்காகக் கண்ணீர் வடித்துப் பிரார்த்திக்கும் நீ, பிறர் கண்ணீர் விடுவதற்காக அக் கடவுளிடம் வேண்டிக் கொள்ளாதே.

# மாலை

கவிஞர் வி. கந்தவனம்

இருட்டு வெளியில் எருத்து மாட்டிற்
குருட்டு மனிதரினம் — பாலை
அருட்ட வீணே யலைந்து பொழுதை
வெருட்டி வாழுகிருர் — மாலை
மருட்ட மாளுகிருர்.

அரும்பு மலரால் அமைத்து மலைந்த
துரும்பி ஞலையிலே — சாறை
இரும்பி விருந்தே எடுக்க முயலும்
நரம்பு தெரிபவர்கள் — மாலை
விரும்பி விரைபவர்கள்.

ஒருங்க நின்றோர் ஒளித்து முந்தி
மருங்கு தான்தெரியாப் — பாலை
நெருங்கிக் கனிகள் சுருங்கித் தேடும்
குரங்கில் எழுந்தவர்கள் — மாலைச்
சிரங்கி லமுந்துகிருர்.

பொறுத்த சரிவில் அறுத்த வலைவில்
நிறுத்தி யற்றவொரு — உந்தில்
குறித்த நெறியும் குடித்த வெறியில்
வெறுத்து—ஓடுகிருர் — மாலை
உறுத்த வாடுகிருர்.

கெடுத்து நெறியைப் பிடித்த இருளிற்
படுத்து—உறங்குகிருர் — இறைவா
கொடுத்து—அறிவை முடித்து மருளைத்
தடுத்து நல்வழியில் — இவரை
எடுத்துச் செல்லொளியில்.

# கலையும் மரபும்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலைப் பல்கலைக்கழகங்களில் இசைப்பட்டம் பெற்றவர் பலர். வட இலங்கைச் சங்கீத சபை தொடங்கப்பட்ட காலம் தொடக்கம் அதனுடன் நெருங்கிய தொடர்புடையவராக இருக்கின்ருர் இவர். 1964ஆம் ஆண்டிலே அகில இலங்கை அரசினர் இசையாசிரியர் சங்கத்தால் "சங்கீத வித்துவ பூஷணம்" என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. 1965இல் அகில இலங்கை சங்கீத வித்வ சபையினரால் நடாத்தப்பட்ட இசைவிழாவில் பொன்னடை போர்த்தி 'சங்கீத வித்வமணி' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. சில ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நடந்த இசைவிழாவிலே இராமநாதன் இசைக்கல்லூரிப் பேராசிரியராக இருந்த சித்தூர் சுப்பிரமணியபிள்ளை இவருக்குப் பொன்னுடை போர்த்திப் பாராட்டினுர். அப்போது பேராசிரியர் கூறியவை "நாதசுர வித்துவான் மாவை ஆதீனப் புலவர் நா. சோ. உருத்திராபதியை நான் பாராட்டுகிறேன். இவர் தனக்கென ஒரு பாணியைக் கையாள்கின்ருர். கர்த்தா இராகம் வாசிப்பதிலும் இராகங்களை மத்திம சுருதிப் பண்ணி உருப்படி வாசிப்பதிலும் பல்லவி சுரம் வின்னியாசமான தானங்களில் சரளமாக வாசிப்பதிலும் கைதேர்ந்தவர்; வாய்ப்பாட்டுச் சொல்லிக் கொடுப்பதில் பெரும் நிபுணர், ஆற்றல்படைத்தவர். அவரின் சேவையைப் பாராட்டுவது ஆனமூர்த்திப்குப் பிரீதியான அலுவல் என நம்புகின்றேன்". (தொடரும்)

# இராசராசன் பெருநலம்

சிவபாதசேகரன் என்னும் திருமுறைகண்ட முதலாம் இராசராசன் வரலாறு தமிழகத்தின் பொற்பு மிக்க தொன்று: பெருந்தன்மையும், பெருவீரமும் நன்றி மறவாத்திறனும், சிவநெறி உறைப்பும், அதே நேரத்தில் சமயசமரசமும் கொண்ட இப் பெருமன்னன் மன்னருட் தலைசிறந்து சிறப்புற விளங்குகின்ருன். கி. பி. 985 முதல் 1014 வரை ஆண்ட இவன் புகழ் உலக வரலாற்றிலேயே இடம்பெற வேண்டியது. இளமையிலேயே தாய் தந்தையரை இழந்த இவன் சோழ நாட்டை ஆண்ட தன் பாட்டனுர் கண்டராதித்தர் (கி. பி. 949—957) மனைவியாராம் செம்பியன் மாதேவியாரால் நன்கு பேணிப் பாதுகாக்கப்பட்டான். இவனுடைய சிவபக்திக்கு வித்திட்டவர் இவ்வம்மையாரே. இவன் பாதுகாப்புக்கும், பெரும் அரசியற் சிறப்பிற்கும் இவன் தமக்கையார் குந்தவைப்பிராட்டியார் பெரிதும் உதவினுர். இப் பேரரசப் பெண்குல திலகங்களை இம் மன்னன் என்றும் நினைவு கூர்ந்திருந்தான். தன் இரு பெண் மக்களுக்கு அவ்விருவர் பெயரையுமே சூட்டியுள்ளான். தான் பட்டத்துக்கு வரவேண்டிய அரச உரிமை உடையவனுய் இருந்த போதும் செம்பியன் மாதேவியார் மகனுராம் உத்தம சோழன் அரசனுக ஒருப்பட்ட இவன் தியாக சிந்தனையும், பரந்த மனப்பாங்கும் இவன் பெருங் குணத்துக்கு எடுத்துக் காட்டாகின்றன. இம் மன்னனைப் பற்றி எண்ணும் போது மகாராட்டிர சிவாஜி மன்னன் பெருஞ் செயல் நினைவுக்கு வருகிறது. இவனுக்குப் படைக்கலப் பயிற்சியளித்த குரு இராமதாசர் இவன் மனநிலையைப் பரிசோதிப்பதற்காகத் தனக்கு அவன் இராச்சியத்தைத தருவானு என உசாவினுர். சிவாஜி அப்படியே 'தந்து விட்டேன்' என்ருன். இராமதாசர் அதனை ஏறக மறுத்துத் தானும் அவனுக்கு இராச்சியத்தை மீண்டும் கொடுத்ததாக வற்புறுத்திக் கூறிய

செந்தமிழ்மணி பொன் கிருஷ்ணபிள்ளை

போது தனது அரசு ஒரு துறவிக்கே உரியது என்பதைக் காட்டும் காவிக் கொடியை சிவாஜி ஏற்றி விட்டான். உத்தம சோழனுக்குப் பிறகே இராசராசன் கி. பி. 985 இல் சிம்மாசனம் ஏறினுன்.

## அருமைத் தமிழ் காத்த அரசன் அன்புப் பண்பு

அடியார் பாடும் தேவார அருள் முறைகள் இவனைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கச் செய்தன: அதனுல் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகளை நாடினுன். பொல்லா (சுயம்பு)ப் பிள்ளையார் திருவருளால் தில்லையம்பலக் கோயிலின் அறை ஒன்றில் செல்லுண்டெஞ்சிய மூவர் தேவாரங்களையும் ஏழு திருமுறைகளாக வகுப்பித்தான். திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபுப் பெண்ணொருத்தி இப் பாடல்களுக்குப் பண் அமைத்தாள். கறையானுக்கு அருமை அன்புத் தமிழ் இரையாகாது தடுத்த இம் மன்னர் பிரானுக்கு தமிழ் நாடு என்றும் கடப்பாடுடையது. சைவ வழியில் நாடு இயங்க 48 ஓதுவார்களைத் தஞ்சைக் கோயிலில் நியமித்தான். நாகபட்டினத்தில் சூளாமணி விகாரமென்ற புத்தவிகாரம் அமைக்க இசைவு தந்தான். சமண ஆலயங்களுக்கும் இவன நிபந்தங்கள் அளித்துள்ளான். இவன் சமய சமரச நிலைக்கு இவை உதாரணங்களாகும்.

## கோயில் மூலம் நாம் காணும் இவன் இருதய விரிவு

இவன் பெரும் புகழுக்கும், பரந்த மனப்பான்மைக்கும், சமயபக்திக்கும் இடனுய் நின்று இலங்கிக் கொண்டிருப்பது பிரகத்தீசுவரர்—பெருவுடையார்—தலம் என்னும் தஞ்சைத் திருக்கோயிலாகும். இது திருவிசைப்பாவில் இராசராசேச்சுவரமெனக் கருவூர்த் தேவரால் அழகுற அருள்மீதூரப் பாடப் பெற்றுள்ளது. இக் கோயிலின் மூர்த்திக்கு இக்கருவூர்த் தேவரே அட்டபந்தன மருந்தைச் சாந்தி அப் பெருமானை நிலைநிறுத்தினுர்; மிகச் சிறந்த ஈடும் எடுப்புமற்ற கோயிலாக இஃது இலங்குகிறது. இக்கோயிற் கோபுரம் 216 அடி உயரம் உடையது. இதன் சிகரத்தில் ஒரே கல்லாலான கற்குமிழ் உண்டு. அது 80 தொன் நிறையுடையது. விஞ்ஞான பொறியியல் முன்னேற்றம் பெற்ற இக் காலத்தவருக்கே அப் பெரும் ஒற்றைக்கல் எப்படி அத்தனை உயரத்துக்கு ஏற்றப்பட்டதென மலைப்பு ஏற்படுகிறது. மூலத்தானத்திலுள்ள பெரிய சிவலிங்கத்துக்கு எதிராக ஒரே கல்லாலாய நந்தியின் முற்பக்கம் 12 அடி 2 அங்குல உயரமும் பிற்பக்கம் 7 அடி 5 அங்குல உயரமும் உள்ளது. மூக்கு நுனியிலிருந்து பிற்பக்கம் 16 அடி நீளங் கொண்டது. பெருங் கோயில் பெரு விமானம் பெரும் மூர்த்தி பெரு நந்தி அமைந்துள்ள இத் தலம் இராசராசன் பெரு மனத்தைக் காட்டுகிறது அல்லவா? மாற்ருரைப் புறங்கண்டு பெரு வீரத்தோடு இலங்கிய இம் மன்னன் பெரு நலமும் தமிழன்பும் பக்திப் பெருக்கும் இயம்ப முடியாதன.

பத்துத் தலங்களின்மேல் அமுதூறும் திருவிசைப்பாக்கள் தந்த சிவயோகியார், கருவூர்த்தேவர் தஞ்சை இராசராசேச்சரத்தின்மேல் பாடிய திருவிசைப் பாப் பாடலொன்று வருமாறு:

நெற்றியுற் கண்ணன்
கண்ணின்நின் றகலா
நெஞ்சினில் அஞ்சிலம்
பலைக்கும்
பொற்றிரு வடிஎன்
குடிமுழு தாளப்
புகுந்தன ; போந்தன
இல்லை ;
மற்றெனக் குறவேன்
மறிதிரை வடவாற்
றிடுபுனல் மதகில்வாழ்
முதலை
எற்றுநீர்க் கிடங்கில்
இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத்
திவர்க்கே.

இராசராசேச்சரம் என்னும் கோயிற் பெருமானுரது நெற்றிக் கண் என் கண்ணை விட்டு நீங்காது அமைந்திருக்கிறது. அழகிய சிலம்பொலிக்கும் அப் பெருமான் திருவடிகள் என் குடும்பம் முழுவதையும் ஆட்கொள்ளுமாறு என் நெஞ்சுட் புகுந்தன: அவை அங்கு தானே வெளி வாராது தங்கி நிற்கின்றன: இத்தகைய அருமைப் பெருங் கடவுளைத் தவிர எனக்கு வேறு உறவினர் யாண்டும் இலர். இப்பதி மடங்கும் அலைகளையுடைய வட ஆற்றின் நீர் செல்லும் மதகில் முதலைகளை எற்றுகின்ற அகழியை உடையது. அவ்வகழியோ மதிலாற் சூழப்பட்டிருக்கிறது. இதுவே தஞ்சை இராசராசேச்சரக் கோயிலாகும்,

இந்த அருமை இராசராச சோழன் மகன் முதலாம் இராசேந்திரன் என்கின்ற கங்கை கொண்ட சோழன் கோயிலை அடுத்துப் பார்ப்போம்.

# பாடலில் ஒரு பாத்திரம்

ஆஸ்பத்திரிகளுக்குப் போய்த்தான் டாக்டர்களைச் சந்திக்க வேண்டுமென்றில்லை. இருபத்தியொரு ரூபா கட்டாமல் இரண்டு மூன்று மணித்தியாலம் கியூவிலே நின்று ஏங்கித் தவம் செய்யாமல், இருந்த இடத்திலேயே நாங்கள் ஒரு டாக்டரைச் சந்திக்கலாம்.

புலவர் பார்வதிநாத சிவத்தின் கவிதையிலே வரும் அந்த டாக்டரும் ஏனைய டாக்டர்களைப்போல் மரியாதை தெரியாத டாக்டர்தான். தன்னிடம் வரும் நோயாளி "வருஷமொரு நோயால் வாடுகிறேனையா" என்று சொல்ல "சரி சரி எல்லாம் மாறும் நாங்கள் தாறதை போய்க்குடி" என்று கொஞ்சங்கூட மரியாதை இல்லாமல் பதிலளிக்கிருர். அத்துடன் அவர் நோயாளியின் நாடியையும் பார்க்கவில்லை; நயனத்தையும் பரிசோதிக்கவில்லை. ஆஸ்பத்திரி மேல் மாடியைப் பார்த்துக் கொண்டே ஏதோ ஒரு மருந்தை எழுதிக் கொடுக்கிருர். நோயாளிக்குச் சந்தேகம். தனது நோயைப் பரிசோதிக்காமல் டாக்டர் எழுதிக் கொடுக்கும் இந்த மருந்து தனது நோயை மாற்றுமோ அல்லது தன்னையே இந்த உலகத்தை விட்டு மாற்றுமோ என்று. கொஞ்சக் காலம் இந்த நாட்டில் உயிர் வாழ விரும்பிய அந்த நோயாளி கொஞ்சம் துணிச்சலை வரவழைத்தவராய் "ஐயா, நீங்கள் எழுதித்தாற மருந்தை என்ரை நாடியைப் பார்த்துவிட்டு எழுதித்தந்தால் நல்லாயிருக்கும்" என்ருர்.

இதற்கிடையே அழகான ஒரு லேடி வைத்தியப் பரிசோதனைக்காகக் காத்திருப்பது டாக்டரின் கண்களுக்குத் தெரிந்தது. உடனே தனக்கெதிரே நின்றுகொண்டிருந்த ஆண் நோயாளியை அனுப்பிவிட்டு அந்த அழகான பெண் நோயாளியோடு அதிக நேரம் மினைக்கெட விரும்பிய அந்த டாக்டர் "அதோ ஒருலேடி அம்மா அதிக நேரமாய்க் காத்துக் கொண்டிருக்கிரு. அவவைப் பார்க்க வேணும். கெதியாய் இடத்தைக் காலிபண்ணு" என்ருர். அந்தநோயாளியோ ஒரு விடாக்கண்டர். நெற்றிக் கண்ணைக் காட்டிலும் குற்றம் குற்றமே என்று சொல்லும் நக்கீரரின் பரம்பரையில் வந்தவர். அவருக்கு இந்த டாக்டர் எம்மாத்திரம். "ஐயா உங்களைப்போலே நோயாளியைப் பாராமல் மருந்து குடுக்கிற டாக்டர்கள் இருக்கிறவரைநோயாளியும்இருக்கத்தான் செய்யும் என்ருர்". உடனே டாக்டருக்கு வந்து விட்டது கோபம். ஆஸ்பத்திரியிலே மருந்து இருக்கோ இல்லையோ, ஆனல் அங்கே வேலை செய்யும் ஊழியர்களிடம் கோபம் இருக்கத் தவறுவதில்லை. அந்த முறையில் டாக்டரும் ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் ஊழியர்தானே. எனவே வெகு எளிதாகக் கோபத்தை வரவழைத்துக் கொண்ட டாக்டர் "என்ன நீர் ஒரு அதிகப்பிரசங்கியாயிருக்கிறீர் எங்கடை கண்களென்ன உங்கடை மாதிரி ஓடினறிக் கண்களா? நாங்களும் ஸ்பெஷலிஸ்ட். அதனலை எங்கடை கண்களும் ஸ்பெஷலிஸ்ட். நீர் வாசலிலே வாற பொழுதே அதுகள் உமக்கு என்ன வருத்தமெண்டு பார்த்துச் சொல்லும். இனி எல்லா வருத்தத்துக்கும் இஞ்சை குடுக்கிற மருந்து ஒரு மருந்துதான். அதனல் நாடி பார்த்து, நரம்பு பார்த்து மருந்து எழுதவேண்டிய அவசியமேயில்லை" என்று சீறினுர்.

"புலவர் தமிழ் மாறன்"

அடுத்த நிமிடம் அந்த நோயாளி என்ன செய்தார் என்பதை நூலாசிரியர் சிவமும் சொல்லவில்லை அதனல் நானும் சொல்ல முடியவில்லை.

இதோ அந்தப் பாடல்

"நாடியைப் பார்த்தார் இல்லை
நயனத்தைப் பார்த்தார் இல்லை
மாடியைப் பார்த்த வாறே
மருந்தினை எழுதித் தந்தார்
நாடியைப் பார்த்துத் தந்தால்
நன்றென்றேன் அயலில்
நிற்கும்
லேடியைப் பார்க்க வேண்டும்
லேட்இன்னே செல்செல்
என்ருர்.

நோயாளைப் பார்த்திடாதே
நோயினைக் கூறும்மன்னர்
ஓயாமல் அரசாங் கத்தில்
உயர்பணி செய்வ தாலே
நோயேதும் மறைவ தில்லை
என்றுநான் நுவன்றேன் சுத்த
வாயாடி என்று கூறி
வார்த்தைகள் மேலும்
சொன்னுர்.

# தச்சன் செய்த பிள்ளை

"வண்ணை முத்து"

பிள்ளை நல்ல பிள்ளை
பேசான் இந்தப் பிள்ளை
கள்ளம் செய்யாப் பிள்ளை
காசு கேட்காப் பிள்ளை
துள்ளி ஓடாப் பிள்ளை
துடுக்குச் செய்யாப் பிள்ளை
சண்டி செய்யாப் பிள்ளை
சண்டை பிடிக்காப் பிள்ளை
உண்ணத் தெரியாப் பிள்ளை
உடுக்க அறியாப் பிள்ளை
நடக்கத் தெரியாப் பிள்ளை
நகைக்க அறியாப் பிள்ளை
பாடம் படிக்காப் பிள்ளை
படுத்துக் கிடக்கும் பிள்ளை
நிற்கத் தெரிந்த பிள்ளை
நீரில் மிதக்கும் பிள்ளை
மூச்சு விடாப் பிள்ளை
முழித்துப் பார்க்காப் பிள்ளை
தவழத் தெரியாப் பிள்ளை
தச்சன் செய்த பிள்ளை.

# பாரதத் தலைநகரில் இலங்கை ஓவியர்

1946ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தில்லித் தமிழ்ச் சங்கம் கடந்த இருபத்தாறு ஆண்டுகளுக்கு மேலாகப் பாரதத்தின் தலைநகரான புது தில்லியில் தமிழ்மணம் பரப்பி வருகிறது. தலைநகரில் வாழும் தமிழன்பர்களை ஒன்று கூட்டி இலக்கிய உரைகள் மற்றும் பொங்கல், புத்தாண்டு போன்ற விழாக்கள் மூலம் அவர்களைத் தமிழ்க் கலைகளிற் திளைக்கச் செய்கிறது. சில குறிப்பிட்ட பெருவிழாக்களைக் கொண்டாடும் காலத்தில் தமிழகத்திலுள்ள தமிழ்ப் பெரியோர்களையும் அழைத்துச் சிறப்புச் செய்கிறது. ஆனால் வெளிநாடுகளிலிருந்து வருகைதரும் தமிழ்ப் பெரியோர்கள் தில்லிக்கு வருகின்ற வாய்ப்பு அரிது. அத்தகைய அரியதொரு நல்வாய்ப்பு அண்மையில் சங்கத்திற்குக் கிடைத்தது.

கேரளப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் திருமிகு கி. நா. நாச்சிமுத்து அவர்களால் அழைக்கப்பட்டு அப் பல்கலைக் கழகத்திலும், சென்னை, மைசூர் ஆகிய பல்கலைக் கழகங்களிலும் ஓவியக்கலை பற்றிய சொற்பொழிவுகள் ஆற்றுவதற்கெனப் பாரதத் திருநாட்டிற்கு வந்துள்ள யாழ்ப்பாணத்தின் கல்வி, கலை, கலாசாரக்காப்புக்கழகத்தின் பொதுச்செயலாளர் திருமிகு. ச. பெனடிக்ற் அவர்கள் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்கி 4-7-1973 புதன்கிழமை மாலை சங்கம் ஏற்பாடு செய்த கூட்டத்தில் "ஓவியம்" என்னும் தலைப்பிலே சுமார் ஒன்றரை மணிநேர காலத்துக்குச் சுவையானதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

சரஸ்வதி அந்தாதிப் பாடலுடன் கலைத் தாய்க்குத் தமது வணக்கத்தைச் செலுத்தி ஓவியம் பற்றிய பேச்சை அவர் தொடங்கினார்.

ஓவியம் என்ற சொல் எப்படி ஓம் என்ற தத்துவத்திலிருந்து பிறந்து வளர்ந்தது என்பதைப் படிப்படியாக விளக்கிக் கூறினார். ஓம் என்பதில் 'ஓ' உயிரெழுத்து 'ம்' மெய்யெழுத்து. அதுபோல மனித உருவும், உயிரும் மெய்யும் சேர்ந்த ஒன்றாகும். ஐம்பெரும் பூதங்களால் ஆகிய இயற்கை எப்படி உயிரும் மெய்யுமாகக் கலந்துள்ளது என்பதை விரிவாக விளக்கியுரைத்தார். உயிர்–மெய் தத்துவத்திலிருந்து ஒலி, ஒளி தத்துவம் பிறந்த வரலாற்றையும் அழகுற எடுத்துக் கூறினார்.

நாத ரூபங்களைக் குறித்து அவர் விளக்கிய விதம் எல்லார் மனத்தையும் ஈர்க்கக் கூடிய வகையில் அமைந்திருந்தது.

காலத்தால் அஃறிணை உயர்திணை பெற்றதும், உயர்திணையில் தெய்வ அமைப்புக்கள் ஆக்கப் பெற்றதும,

எஸ். ரங்கராஜன்

அதன் பின்னர் அவ்வமைப்பிலிருந்து மனித வரலாறு தோன்றியது பற்றியும் முறையாக எடுத்துக் கூறினார். அவர் கையாண்ட பகுதிகளில் ஒருவன்–ஒருத்தி தத்துவம் ஒருவராகிய கடவுளுக்கு அமைக்கப்பெற்ற பான்மை மிகச் சிறப்பாக இருந்தது. கடவுளை உணர்ந்தறிந்த ஞானிகள், ஒருவன் என்றும் ஒருத்தி என்றும் பிரித்துக் கூறாமல் ஒருவர் என்றே வெளிப்படுத்தினர். இந்த உண்மையைத் தமது பேச்சிற் குறிப்பிட்ட ஓவியர் அந்த ஒருவர் என்ற கடவுள் எங்கே இருக்கிறார் என்பதனைத் திருமிகு. பெரியசாமித் தூரன் அவர்கள் இயற்றிய 'எங்கேதேடுகின்றாய்' என்று தொடங்கும் கருத்துச் செறிவுள்ள பாட்டை இசைத்து விளக்கிக் காட்டினார்.

கற்காலத்தில் வாழ்ந்த மானிடர்கள் இயங்கிப் புரிந்த சைகைகள் கால ஓட்டத்தில் மாறிமாறி இன்று எப்படிக் கலைகளாக வளர்ந்து நமக்குக் குக் காட்சி அளிக்கின்றன என்பதையும் தக்க ஆதாரங்களுடன் அவர் எடுத்துக் கூறினார்.

கர்நாடக இசைக்கலை பற்றியும் அவர் சிறப்பாகப் பேசினார். ஆதிமனிதன் சைகைகளால் பேசிக் கொண்டதனை அடுத்து, சித்திர எழுத்துக்களும், ஒலி வடிவங்களும் பிறந்த வரலாற்று உண்மை எல்லாருக்கும் தெரிந்ததே. ஆனால் அதனைக் கொண்டே அனைத்துக் கலைகட்கும் ஓவியமும், இசையும் தான் ஆதிக் கலைகள் என்பதைத் தர்க்கரீதியில் அவர் விளக்கியபோது அவையினர் வியப்பில் ஆழ்ந்தனர். முக அமைப்பின் துணைகொண்டு குணங்களை ஊகிக்கலாம் என்று கூறி, எடுத்துக் காட்டாக அவையிலிருந்த இருவரைக் கொண்டே அதனை விளக்கினார்.

ஒரு செங்குத்தான கோடு வரைந்து, அதை எட்டுச் சமபாகங்களாகப் பகுத்துப் பெண்ணுருவாக்கியபோது ஓவியம் மிக எளிய கலை என்ற ஒரு மாயையை உண்டாக்கியது. பிறகு சில கோடுகளின் இடங்களை மாற்றி ஒவவொரு முறையும் ஒவ்வொரு புது நடன முத்திரையைச் சித்திரித்தது வியப்பாயிருந்த போதுதான் "ஓவியம்" எளிய கலை அல்ல; இவருக்கு ஓவியம் எளியகலை என்பது புரிந்தது.

இவர் இசை பயின்றதின் காரணம் மிகச் சுவையான ஒன்று. இசை அரங்குகளில் மற்றவர்களெல்லாம், ஆகா, ஆகா என்று கூறியும், கைதட்டியும் ரசித்ததைக் காணும்போதெல்லாம், நாம் ஏன் கைதட்ட முடியவில்லை என்று கேள்வி கேட்டுக் கொண்டு, ரசிக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே முறைப்படி இசை பயின்றேன் என்றார் திரு. பெனடிக்ற்.

அவையிற் கூடியிருந்த அன்பர்களின் விருப்பத்திற்கிணங்கப் பாபநாசம் சிவன் அவர்கள் இயற்றிய ஒரு பாடலை ஓவியர் பாடியபோது 'நான் கேட்பதற்காக மட்டுமே சங்கீதம் படித்தவன்' என்று அவர் சொன்னதை எவரும் நம்புவதற்குத் தயாராக இல்லை,

புது தில்லியின் தலையாய ஓவியக் கலைஞரும் ஓவியக் கண்காட்சிகள் (One man-show) பல நடத்தியவருமான திரு. ஆர். சாரங்கன் அவர்கள் தலைமையுரையில், திரு. பெனடிக்ற் அவர்களின் உரையில் தானே பல புதிய விஷயங்களைக் கற்க முடிந்ததாய்க் குறிப்பிட்டது இருவர் சிறப்பையும் உணர்த்துவதாய் அமைந்தது.

சங்கத்தின் துணைச் செயலாளர் திரு. பி. ஆர். வெங்கடகிரி தன்னுடைய நன்றியுரையில் திரு. பெனடிக்ற் அவர்களின் ஓவியத் திறனையும், இயல், இசைத் துறைகளில் அவர் பெற்றிருக்கும் ஆழ்ந்த புலமையையும் பாராட்டிப் பேசினார்.

இத்தகைய கலையுள்ளம் கொண்ட வெளிநாட்டுச் சான்றோர் ஒருவர் சங்கத்திற் சிறப்புரையாற்ற இசைந்ததில் தமிழ்ச் சங்கம் மிகவும் பெருமை அடைகின்றது என்றும் குறிப்பிட்டார். அவருடைய பாரத நாட்டுச் சுற்றுப்பயணம்வெற்றிபெறச் சங்கத்தின் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். தேசிய கீதத்துடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

# பேரின்பத்துக்கு வழி

**இருவகை இன்பத்தையும் விளக்கும் இக் கட்டுரை பேரின்பத்தை விளக்குவதோடு அதற்கும் வழிகாட்டுவதாகவும் உள்ளது.**

மானிடராய்ப் பிறந்த நம்முள் பலர் விரும்புவது "இன்பம்". அப்படிச் சொல்லும்போது அவர் உண்மையில் தேடுவது சிற்றின்பம். மிகச் சிலரே விரும்புவது "பேரின்பம்".

இரு சொற்களுக்கும் வித்தியாசம் என்னவெனில், முன்னது அடையற்கெளிது, பின்னது அடையற் கரிது, முன்னதை இழப்பது எளிது; பின்னது பெற்றபின் நீடித்திருப்பது; முன்னது கால தேச, வர்த்தமானங்களுக்குக் கட்டுப்பட்டது. பின்னது இம் மூன்றும் அற்ற நிலையை எய்த உதவுகிறது.

சிற்றின்பத்தின் விளைவு துன்பமாகும். இதை மறந்தே மானிடன் மீண்டும் மீண்டும் சிற்றின்பத்தை நாடிப் பெருந்துன்பத்தில் உழலுகிறான். ஆனால் பேரின்பத்தின் விளைவு பேரின்பமே தான்.

நல்லது, தீயதைப் பாகுபாடு படுத்திக் காண்பது மனம். நல்வழியிற் செல்ல மனத்துக்குத் திடமான சக்தி தருவது அறிவு.

அறிவை வளர்க்க இன்றியமையாதது உடல் நலம். உடல் நலத்தைப் பேணுவதற்கு அத்தியாவசியமானது ஒழுக்கம், சீலம்.

இக் காலத்தில் சிலம் விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் பெயரில் துன்பத்தைத் தரும் வழிகளிலேயே செல்லுகிறது. மனிதன் தன்னைத் தானே அதிலிருந்து மீட்டுக் கொள்ள நம் நாட்டில் பண்டையகாலத்தில் வாழ்ந்து வந்த முறைகளை ஆராய வேண்டுவது அவசியமாகும்

"வாழ்வின் அறிவு" என்ற சாத்திர முறைதான் ஆதியிலிருந்து பழகிவந்த "ஆயுர் வேதம்" என்பதாகும். சாத்திரம் பிழைக்க அதைக்கொண்டு பிழைப்புள்ளவர்கள் கையில் மட்டும் அது தங்கிவிடக் கூடாது.

ஆங்கிலப் பேரறிஞர் திரு. பர்னார்ட்ஷா சொன்னார். "தொழில்கள் யாவும் பொது மக்களுக்கு விரோதமான சூழ்ச்சி" என்று. மனு தர்மம் கூறுகிறது.

"பிறர்வசம் யாவும்
துயர்தரும் நாளும்
தன்வசம் பயக்கும்
இன்பமு மருளும்.

பொன்னும், பொருளும் இன்ப வாழ்வுக்குத் தேவையாக இருக்கலாம். ஆனால் உடல் நலம் ஒன்றினாற் பொன்னால் சுகம் கிட்ட முடியாது. உடல் நலமிருந்தால் பொன்னும், பொருளும் இல்லாத ஏழையும் இன்பமடையலாம். விலை கொடுத்து வாங்க முடியாதது உடல் நலம்.

எப் பொருளையும் இழந்தபின் மீட்பதைவிட இருக்கும்போதே காப்பது மேலாகும். இதற்கான வழியை இறைவன் படைப்பின் போதே எல்லா ஜீவ ராசிகளுக்கும் இயல்பாகவே நல்வழியிற் செல்லும் ஆற்றலைப் புகுத்தியிருக்கிறான்.

ஆனால் மனிதன் தன் அகம் பாவத்தினால் அதனை இழந்துவிட்டான். ஒரு சில அறிவாளிகள் இதனை அறிந்து ஆராய்ந்து அந்தச் சாத்திரத்தை மீண்டும் நமக்குத் தந்திருக்கின்றனர். அதுவே 'இயற்கை வாழ்வு" அல்லது "இயற்கை வைத்திய"மாகும்.

(வளரும்)

— வ. கணேசசர்மா

## காணும் ஒரு தெய்வம்

"பாவலன்"

ஈசனவன் மானிடர்தம் கண்முன் தோன்ற
எடுத்ததொரு திருவடிவோ மனித நெஞ்சில்
நேசமதை வளர்ப்பதற்குப் பிரமா செய்த
நிறைவான புதுப்பொருளோ அமுதைச் சொல்லாய்ப்
பேசுமொரு அரும்பொருளோ அழுக்கா றென்னும்
பிழைபொருந்தா எழிற்பொருளோ அறியே னேனும்
தேசமைந்த அப்பொருளைக் குழந்தை என்பேன்
தெய்வத்தின் அழகைஅதன் அழகிற் காண்பேன்.

குழந்தையிலா வீட்டினிலே இன்பம் இல்லை
குற்றமிலா விருந்தினர்தம் வரவும் இல்லை
வளர்ந்துவரும் அன்பினுக்கோ இடமும் இல்லை
வையகத்துத் தொடர்புகட்கோ வழியும் இல்லை
பழந்தமிழ் நூல் போற்றுகின்ற அறமும் இல்லை
பாரினிலே தனிமைஒன்றே சொந்த மாகும்
தளர்ந்திடுங்கால் அதைநீக்கத் துணையும் இல்லை
தரையினிலே ஆதலினாற் குழந்தை வேண்டும்.

'கலைக்கண்'

மாதப் பத்திரிகை

இதனை ஊக்குவிப்பது உங்கள் கடமையாகும்

தனிப்பிரதி சதம் 25

ஆண்டுச் சந்தா — ரூபா 4-00
ஆறுமாத சந்தா — ரூபா 2-25 } தபாற் செலவு உட்பட

# புரட்சிக்கோர் சிலம்பு

— புலவர் இளங்கிரன் —

குற்றவாளி தண்டனை அனுபவிக்கத் தவறினும் நிரபராதி தண்டனை அனுபவிக்கக்கூடாதென்பது நீதி பரிபாலன முறையின் அடிப்படைக் கோட்பாடாகும். குற்றங்கள் மலிந்து பொலிந்து கிடக்கும் இவ்வுலகத்தில், அவை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டாலேஒழியக் குற்றஞ் சுமத்தப்படும் ஒருவனுக்கோ ஒருத்திக்கோ தண்டனை விதிக்கப்படலாகாது. இது இவ்வண்ணமாக நடைமுறையில் இருக்கும் காலகட்டத்தில் நீதி, தருமம், சட்டம் காக்கப்படும். இவ்வடிப்படைக் கோட்பாடுகள் நிரந்தரமாக நிலைபெற்றுவிட்ட இக்காலத்திலுங்கூட நிரபராதி தண்டிக்கப்படுகின்றான். குற்றவாளி தண்டனை பெறாது தப்பித்துக்கொள்வதுமுண்டு.

நீதிபரிபாலனமுறை கவனமின்றி நடைமுறைப் படுத்தப்படுமாயின், ஒரு நிரபராதியின் உயிர் அநியாயமாக, அக்கிரமமாகக் கெடுக்கப்பட்டதாகக் கருதப்படும். இவ்வாறு கெடுக்கப்படும் உயிரை மீண்டும் மீட்டுத்தர ஒருவர் உளரா? இல்லை. இத்தகைய கண்மூடித்தனமான தீர்ப்பு முறைகள் உலக நாடுகளில் நடைமுறைப்பட்டதை நாம் அறிவோம்; சரித்திரங்களும் நன்கறியும். இவ்வாறு நீதி பரிபாலன முறையில் அரசியல் பிழைக்குமாயின் அவ்வரசியலுக்கு அறங்கூற்றாகுமென்பது பண்டை இலக்கியச் சான்றோர் தரும் இலக்கிய அறிவுச் சான்றாகும்.

“அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாகும்” என்ற கருப் பொருளை அடிப்படையாகக் கொண்டே நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்னும் பெரும் இலக்கியக் கட்டிடத்தைத் தந்தார் ஆங்கிலக் கவிஞர்களான ஷெல்லி, மில்டன் போன்ற கவிஞர்களுக்கு நிகரான இளங்கோவடிகள்.

பாரதியாரால் “நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்” என்று பெருமைப்படுத்தப்பட்ட சிலப்பதிகாரத்தைப் புரட்சிச் சிலம்பாக, புதுமைச் சிலம்பாக, பழிபடரா மன்னவன் ஆட்சியின் அநீதியை அழிக்கும் வீரச்சிலம்பாக ஆக்கித் தந்தார் இளங்கோ அடிகள். அண்ணன் இருக்கத் தம்பி அரசாள்வதா? என்று கூறி மாறுரைத்த இலக்கிய மேதை இளங்கோவடிகள் தன் தம்பி சேரன் செங்குட்டுவனை நோக்கி “தம்பி! நீ அரசியல் உலகில் புகழைத் தேடு; நான் புலமை உலகில் புகழைத்தேடுகின்றேன்” என ஆட்சி முறையில் அரசியற் புரட்சி செய்த இளங்கோவடிகள்தான் கற்புக கடம்பூண்ட பொற்புடைச்செல்வி கண்ணகியைக் காப்பியத் தலைவி ஆக்கிப் புரட்சிக்கோர் கண்ணகியாக! புதுமைக்கோர் கண்ணகியாக, பெண்ணுலகுக்கோர் வழிகாட்டியாக இலக்கிய உலகில் உலவவிட்டு உளம் மகிழ்ந்தார்.

பெண்மை அடிமையாக அடுப்பங் கரையில் ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, பொலிவிழந்து, நல்ல புன்னகை இழந்து பொங்குத் துயரத்துடன் வாழ்ந்த காலம் பாரதியார் காலம்; பெண்மை அடிமை அல்ல, அடுப்பங் கரைக்கு மட்டும் உரியதல்ல, அது ஆளவும் பிறந்தது, ஆட்சி செய்யவும் பிறந்தது, அன்பு செய்யவும் பிறந்தது என்ற புரட்சி எண்ணங் கொண்ட அவர் கவிதை உள்ளம் “சட்டங்கள் செய்வதும் பட்டங்கள் ஆள்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தார்” என்ற பாடல் மூலம் உரிமைக்குரல் கொடுத்தார். அந்த உரிமைக் குரலின் எதிரொலிதான் இன்று பெண்மை ஆட்சி பீடத்தில் அமர்ந்து ஆட்சி செய்கின்றது. இவ்வாறு புரட்சிப் பெண்ணைப் புதுமைச் சமுதாயத்தில் உலவ விடாதிருந்திருந்தால் பெண்மை அடிமையாக அலங்கோலப்பட்டிருக்கும்.

தேசியக்கவி பாரதி காலத்தில் இருந்த பெண்ணடிமை, பிற்போக்கான கொள்கை அவர்முன் வாழ்ந்த இளங்கோவடிகள் காலத்திலும் தடிப்புப்பெற்றிருக்கவேண்டும். அவ்வண்ணம் இருந்தமை கண்டுதான் இளங்கோவடிகள் தமது புரட்சிக் காவியத்தில் புரட்சிக் கண்ணகியை உலவ விட்டிருக்கின்றார். இத்தகையதோர் குறைபாட்டைப் பெண்மைச் சமுதாயத்திற் கண்டுதான் இளங்கோவடிகள் தமது காவியம் முழுமையிலும் பெண்ணின் பெருமையைப் பேசுவதோடு கண்ணகி மூலம் பெண்ணினத்தின் வரலாற்றில் பெரும் அரசியற் புரட்சியைச் செய்விக்கின்றார்.

புரட்சி செய்வதற்கு வல்லமை படைத்தவர் ஆண்கள்தான் என்று எல்லோருங் கூறுவர்; எழுதுவர். அவ்வாறாயின் பெண்மை புரட்சிக்குத் தகுதியற்றதா? தாங்க முடியாத கொடுங்கோன்மை தாண்டவமாடினால் ஆக்கவும் அழிக்கவும் சக்தி படைத்த பெண்மை படை தாங்கிப் போர் தொடுக்கும்; அதில் வெற்றியும் காணும்! இது உலக அரசியல வரலாற்றில் காணக்கிடக்கும் பேருண்மையாகும். போர்க்கோலம் பூண்டு, போர்ப் படை தாங்கி, போர்க்களம் கண்டு வெற்றிவாகை சூடிய வீராங்கனைகளின் வரிசையில் ஜான்சிராணி முதன்மை பெறுவர்.

“வண்ணச் சிறடி மண்மகள் அறிந்திலன்”, “அடக்கம் அமரருள் உய்க்கும்” என்ற இலக்கியத்திற்கு இலக்கணமாக விளங்கிய புரட்சிக் கண்ணகி இல்லில் இருந்தே அறக் கற்பை வளர்த்துக் கொண்டவள். இத்தகைய சீர்பெற்ற கண்ணகியின் இன்ப வாழ்வில் ஊழ்வினை வந்து உறுத்தத் தொடங்கியது. மாசு மறுவற்ற மாதவியின் அன்புவிலங்கை உடைத்தெறிந்த கோவலன் ஆட்சியில் வீழ்ச்சியடைய மாட்டோமென்ற மமதை கொண்டிருந்த அரசவீதியிற் பொற்சிலம்பை விற்கச் சென்று பொற்கொல்லன் ஒருவனால், பாண்டிமாதேவியின் காற்சிலம்பைத் திருடியதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டு கொலையும் படுகின்றான். கோவலன் கொலையுண்ட செய்தியை அறிந்த கண்ணகி துடித்தாள்; துவண்டாள். அவளுடைய தூயநெஞ்சம் விம்மி விம்மி அழுதது. கண்ணகி படும் அவல நிலையை அவலச்சுவை ததும்பப் படம்பிடித்துக் காட்டுகிறார் புலமைச் சிற்பி இளங்கோ.

“பொங்கி எழுந்தாள்
விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள்
முகிலொடும்
சேண்நிலங் கொண்டெனச்
செங்கண் சிவக்கஅழுதாள்
தன்கேள் வனை
எங்கணா என்னா
எனஇணைந் தேங்கிமாழ்கு
வாள்”

புரட்சியின் ஆரம்பம் இங்கிருந்துதான் தொடங்குகின்றது. மாசு மறுவற்ற பாண்டிய அரச வீதியில் என் காற்சிலம்பு கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே எனப் பறை சாற்றுகின்றாள்.

கொலைக்களத்தை நாடுகின்றாள்; கோவலனைக் கண்டாள்; கட்டியணைத்தாள். அவன் காலையில் விடைபெற்றபோது, “பொன்னே, கொடியே” என்று அவன் புகழ்ந்த புகழ் மொழிகள் எல்லாம் கண்ணகியின் மனத்திரையில் நிழலாட்டஞ் செய்கின்றன. அவளுடைய அவலநிலை, ஆறாத் துன்பநிலை அவளுடைய ஆவேசத்தை மேலும் வலுப்படுத்துகின்றது. கண்கள் நெருப்புக் குழம்புபோல் காய்சினத்தைக் கக்குகின்றன. தன் கணவனைக் கொன்ற பாண்டியன் மீது அடங்காச் சினங் கொள்ளுகின்றாள்.

“காய்சினந் தணிந்தன்றிக்
கணவனைக் கூடேன்
தீவேந்தன் தனைக்கண்டித்
திறங்கேட்பன் யான்”

எனத் தன் கணவன் இரத்தந் தோய்ந்த மண்ணில் நின்று சூளுரை செய்கின்றாள். கண்ணகியின் புரட்சியின் வேகத்தை இவ்வண்ணம் மிகைப்படுத்திக் காட்டுகின்றார் இளங்கோவடிகள்.

## ஊக்குவிப்போம்

ஒவ்வொரு மாதமும் 23ஆந் திகதி கலைக்கண் வெளியாகும், கழகமன்றச் செய்திகளை முதல்மாதத்தின் 23ஆந் திகதி தொடக்கம் மறு மாதம் 5ஆந் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கவும்.

ஆசிரியர் : “கலைக்கண்”
28, டேவிட் வீதி,
யாழ்ப்பாணம்.

# இலக்கியத்தின் உயிரும் உடலும்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தச் சின்னஞ் சிறிய பெண், அந்தப் பென்னம் பெரிய மாளிகையில் எத்தனையோ பேர் ஏவலர்கள் இருக்கவும் அவர்களைத் தடுத்துத் தானே தன் அன்பனுக்குப் பாகஞ் செய்கின்றாள். செவிலி சென்ற சமயம் புளிக்குழம்பு செய்கின்ற சமயம். செவிலியை அந்தச் சிறிய தலைவியின் கண்கள் காணவில்லை. அவள் கண்களைத் தாளிதப் புகை சூழ்ந்து கொண்டது. அப்படியிருந்தும் அக் கண்கள் தாளிதத்தையே நோக்கியபடியிருக்கின்றன. ஒரு கை துழாவுகின்றது. அந்தக் கை துழாவிக் கொண்டிருக்கும் போதே மற்றக் கை கட்டித் தயிரைப் பிசைந்து குழம்பு செய்வதற்குப் பதஞ் செய்கின்றது. கண்களும், கைகளும் ஒன்றையொன்று அறியாமலே ஒருங்கு தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் உடுத்திருந்த கலிங்கம்—முன்தானை—நெகிழ்கின்றது. பட்டிற் பொன்னிழைக்கப்பட்ட கலிங்கம், அந்தக் கலிங்கம். கை கழுவித் தொடவேண்டிய புடைவை அந்தப் புடைவை. அது சிரமமிகுதியினால் நெகிழுகின்றது. குழம்பைத் துழாவிய கை துழாவியபடியேயிருக்க, தயிர்பிசைந்த கை தன்னைக் கழுவிக் கொள்ளாமலே அந்தத் தூய துகிலைத் தீண்டி நெகிழ்வைப் போக்குகின்றது. அன்பனுக்குச் சமைக்கின்ற அன்புப் பாகருக்கு எதிரில் அந்தப் பொற்றுகில் எம்மாத்திரம்! அந்தத் துகிலுக்கு ஒரு மறு வந்துவிட்டது; தயிர் மறு. குழம்புக்கு ஒரு பழுதும் வரவில்லை. அதனைக் கண்டதும் செவிலிக்கு உடல் புளகித்தது; கண்ணீர் சொட்டியது. அவள் சம்பவம் இவ்வளவிலிருக்க, அவன் வருகின்றான்; உணவு கொள்ள அமர்கின்றான்; உணவு படைக்கப்படுகின்றது; புளிங்குழம்பை மூக்கு முகர்ந்தது. நா நுகர முன்னமே, கை பரிசிக்கும் போதே “இனிது! இனிது!” என்கின்றான் அவன். காதலர் இருவர் கருத்து ஒருமித்த ஆதரவு இருந்தபடி இது. இந்த உயிரான உரிப் பொருளைக் கருக்கட்டியிருக்கின்றது, பின் வரும் பாடல்

“முளிதயிர் பிசைந்த
காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம்
கழாஅ துடீஇக்
குவளை உண்கண்
குய்ப்புகை கமழத்
தான்துழந் தட்ட
தீம்புளிப் பாகர்
இனி தெனக்
கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்
றொண்ணுதல் முகனே!’

கேட்கப்படுகின்ற இந்தப் பாடல் கருப்பொருட் செய்திகள் பொதிந்த ஓர் உடம்பு. ஆனால், அதில் கண்ணுக்குப் புலப்படாமலே ஓர் உயிர் துடிக்கின்றது. அந்த உயிர் குழம்பிலே நீந்தி, உடை நெகிழ்விலே வீறி, இனிது, என்கின்ற வார்த்தையிலே ஒளிவிடுகின்றது. அது சத்திர சிகிச்சைக்கு அகப்படாதது. அதுவே சுவைத்தற்குரியது. அதற்கு உரி என்று பெயர். உரிதான் இலக்கியத்தின் உயிர்.

## உடல்

உடல் தூலம், சூக்குமம் என இருவகைப்படும். இந்தப் பாகுபாடு இலக்கிய உடலுக்கும் பொருந்தும். ஒரு கவிதையை எடுத்துக் கொண்டால் அதற்குச் சூக்கும உடல் அதன் கருப்பொருட் செய்தி, சொற்கள், சந்தம், ஓசை என்பன கவிதையின் தூல உடல்.

தொல்காப்பியனார் பாடல்களிற் பயிலும் பொருளை முதற் பொருள், கருப் பொருள், உரிப் பொருள் என மூன்றாக வகுத்திருக்கின்றார் என்பது மேலே சொல்லப்பட்டது. உரிப் பொருள் தான் இலக்கியத்தின் உயிரான பொருள்; புலவன் முகந்து கொண்ட பொருள்; புலவனுக்கு உண்டானதொரு நல்ல உணர்ச்சி. முதற்பொருள் உரிப் பொருளான நல்ல உணர்ச்சி உண்டாவதற்கு உபகாரமானவை காலதேயங்கள். உரிப் பொருள் குழந்தை: காலமுமிடமுமான முதற் பொருள் உரிப் பொருட், குழந்தைக்குத் தாயுந் தந்தையுமாம். ஒரு நல்ல இடத்திலே, நல்ல காலத்திலே, புலவனொருவனுக்கு இனியதோர் உணர்ச்சி உண்டாகலாம். அந்த உணர்ச்சி பேணற்பாலது. அதனைக் கருக்கட்டி வளர்ப்பது கருப்பொருள். கருப் பொருளில் வளருஞ் சிசு உரி. உரி—உயிர். கரு—உடல். தூல உடலை நோக்கக் கரு சூக்கும உடல். இனி இதனை ஓர் உதாரணத்தில் வைத்து நோக்குவோம்.

‘நூழிலாட்டு’ என்பது புறப்பொருளில் வருவதொருதுறை. அஃதாவது எதிரேற்ற பகைவர்களைத் தாட்சண்யமின்றிக் கொன்று குவித்தல். இது பேராண்மையென்று, யுத்தவீர உலகில் பாராட்டப்படும். இப்படிப் பேராண்மை செய்கின்ற உண்மைவீரன், அதே சமயத்தில், எதிரேற்ற பகைவனுக்குத் தற்செயலாக ஓர் இடையூறு நேருமானால், உடனே அவனுக்கு உபகாரியாய் மாறிவிடுவான். இது யுத்த தர்மம். இதற்கு ஊராண்மையென்று பெயர். ஊராண்மை—உபகாரியாந் தன்மை. பேராண்மையாகிய மலைக்கு ஊராண்மை சிகரம்; வீர சிகரம். இகத வீர சிகரத்தை,

“பேராண்மை யென்ப
தறுகண் ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன்
எஃகு”

என்று திருவள்ளுவர் வருணிக்கின்றார். இஃது ஓர் உரிப் பொருள்; இலக்கிய உயிர். திருவள்ளுவர் தரும உலகத்திற் கண்டெடுத்த குழந்தை, இப்படி ஒரு குழந்தை உண்டு என்றால், அணு உலகு நம்பாது. அழித்தொழிக்கப்பட வேண்டிய பகைவனுக்கு இடையூறு நேர்ந்தால்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

# இலக்கியத்தின் உயிரும் உடலும்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனித்த அவனை அழித்தொழியாமல் அவனுக்கு உபகரிக்க வேண்டுமென்பதைக் கவியுலகம் எப்படி நம்பும்! நம்ப வைக்கிறதற்கு முன்வருகின்ருர் ஒரு கவிச்சக்கரவர்த்தி கம்பர். அவர் பேராண்மையின் சிகரமான ஊராண்மையாகிய உரிமை என்ற கருவுள் அமைத்து வளர்த்துப் பகிரங்க உலகுக்கு உபகரித்திருக்கின்ருர்.

கற்புத் தெய்வமாகிய சீதா பிராட்டியைப் பன்னசாலையோடு களவு செய்தவனும், அதனுலே பேதையிற் பேதையானவனுமாகிய இலங்கை வேந்தன் ஒருநாள் படையிழந்து வலியிழந்து நிராயுத பாணியாய் இராமனெதிரில் தலைகுனிந்து நாணி நிற்கின்ருன். இராவணனுக்கு இந்த நிகழ்ச்சி தற்செயல்; திருக்கைலாசகிரியைப் பெயர்த்த பாவம் போலும்.

காலால் மண்ணைக் கிளைத்துக் கொண்டு நிலத்தை நோக்கி நிற்கின்ருன் இராவணன்; தவித்து நின்று தயங்குகின்ருன் தசக்கிரீவன் தறுகண்ணனுப் பேராண்மை செய்து நின்ற இராமனுக்கு, பகைவனுப் நிற்பவன் தன் மனைவியைக் கவர்ந்தோனுயினும், அவன் இப்பொழுதடைந்த இழிநிலையைப் பார்த்துச் சகிக்க முடியவில்லை. உடனே இராமன் உபகாரியாய் மாறுகின்ருன். ஊராண்மை செய்கிருன். இராவணனை விளித்து அப்பனே, 'இன்று போய்ப் போருக்கு நாளைவா' என்று உயிர்ப்பிச்சை வழங்குகின்ருன். 'ஆளையா வுனக் கமைந்தன, என்ற பாட்டு கம்பராமாயணத்தில் மிகப் பிரசித்தி படைந்துவிட்டது.

திருவள்ளுவரிலே பேராண்மையென்ற திருக்குறளிலே இலைமறைகாயாய்க்கிடந்த வீர சிகரமான உரிப் பொருள் கம்பன் கைப்பட்டு இப்பொழுது கிரித்திபம் போற் பிரகாசிக்கின்றது. 'பேராண்மை' யென்ற குறள் ஆலம்வித்து. அதிற் கிடந்த வீர சிகரம் வித்தில் அடங்கிக் கிடந்த முளை. அந்த முளை கம்பரிலே ஏற்ற கருப் பொருட் செய்திக் கூடே செழித்து வளர்ந்து பெரிய ஆல விருட்சமாய்த் தண்ணிழல் பரப்பி விளங்குகின்றது.

இராவணன் நிராயுத பாணியானதும் இராமன் 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்றதும் சரித்திர சம்பவமாய் நிகழாமலேயிருத்தல் கூடும். இலக்கியவுலகிலே சம்பவத்தின் நிகழ்வு நிகழாமை முக்கியமன்று. எடுத்துக்கொண்ட உரிப் பொருள் தான் முக்கியம். அந்த உரிப் பொருள் பொருத்தமான உடலில் அமைக்கப்படுமாளுல் அது பிரகாசித்துப் பயன்படும்.

இராவணனே ஒப்பில்லாத வீரன். ஆனுல் ஓர் இராமனெதிரில் நிராயுதபாணியாய் வலி தொலைந்து நிற்பதில் நூதனமில்லை; நிகழத்தக்கதே. அப்படிப் பட்டதொரு சந்தர்ப்பம் நேர்ந்தால், ஓர் இராமனும் 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்று சொல்வது நிகழத்தக்கதே. இராமன் மநுதர்மம் தெரிந்தவன்; தருமத்தை நிலை நிறுத்த வந்தவன்; அவ்வாறு சொல்லித்தான் திருவான். அதனைப் புலமையுலகு ஏற்றுக் கொள்ளும். வாய்ப்பான ஒரு கருப் பொருட் செய்தியில் ஊராண்மையாகிய உரிப் பொருள் வைத்து வளர்த்துக் காட்டப் பட்டதென்று பாராட்டும்.

இராம இராவண பாத்திரங்கள், கருப் பொருள்கள். யுத்த முனையில் ஊராண்மை, உரிப்பொருள். கருப்பொருட் செய்தி உரிப் பொருளுக்குச் சூக்கும தேகம்.

சங்கத்துச் சான்ருேர், சிந்தனையுலகத்திலே தாங்கள் கண்ட உண்மைகளாகிய உரிப் பொருள்களை வைத்துக் காட்ட இராம இராவணர்கள் போன்ற பொருத்தமான பாத்திரங்கள் கிடையாத போது தாமே பாத்திரங்களைப் புனைந்துவிடுவார்கள். அன்றி விலங்குகள், பறவைகள், தாவரங்கள், கொடிகள் செடிகளைக் கூடத் தமது புனைந்துரை வன்மையாற் பாத்திரங்களாக அமைத்துக் கொள்ளுவார்கள். உரிப் பொருளுக்குப் பொருத்தமான வகையிற் பாத்திரங்களாகிய கருப் பொருள்களை அமைப்பதிற்போதிய திறமை வேண்டும். ஆனுல் அதிலும் அருமையானது உயரிய உரிப் பொருளைக் காண்டல் என்பதை உணரல் வேண்டும்; உரி—உயிர் கரு—உடல். உரி நடுநாயகமான மாணிக்கம். அதனைச் சுற்றி வளைத்து பிரகாசிக்கச் செய்யும் தங்கம் கரு. புலவஞெருவனை, அருமையான உரிப் பொருள் உண்மையைக் கண்டதற்குப் பாராட்டாமல் அப் பொருளை அமைத்தற்கு அவன் ஆண்ட கருப் பொருட் செய்தியை மிகுத்துப் பாராட்டுவது வரிசை தெரியாமல் அப் புலவனை அவமதித்ததாயிருக்கும். புலவனுக்கு உரிப் பொருள் உண்மையைக் காண்டலே அரிய காரியம். அது சித்தித்தால் அதனைப் பலவேறு முகமான கருப் பொருட் செய்திகளில் அமைப்பது அப் புலவனுக்குப் பெரிய காரிய மன்று. விஞ்ஞானி ஒருவன் மின்சாரத்தைக் கண்டதே அரிய காரியம். அது கொண்டு பல விநோதங் காட்டுவது கண்டதாய அரிய காரியத்தை நோக்கப் பெரிய காரிய மன்று.

"நன்றி யொருவற்குச்
செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொல்
என வேண்டா"

என்ற தருமத்தைப் பாராட்டாமல் அதனை விளக்கும் பொருட்டுத் தாளுண்ட நீரைத் தலையாலே தருகின்ற தெங்கை உவமையாக எடுத்துக் காட்டியதை மிகுத்துப் பாராட்டுவது ஒளவையாரை இழிவு செய்வதாகும்; சங்கப் புலவர்களுக்கு உலக இயற்கைகளாகிய கருப் பொருட் செய்திகளை அமைப்பது பெரிய காரியமன்று. பெரியதும் அரியதுமான காரியம் உரிப் பொருளைக் காண்பதே உரிப் பொருளே நித்தியமானது; இயற்கையானது காணுகின்ற உலக இயற்கைகள். உண்மையில் நோக்குமிடத்துச் செயற்கைகளே; அநித்தங்களே, ஆகவே உரிப் பொருளே இலக்கியத்தின உயிர். கருப் பொருட் செய்தி இலக்கியத்தின் உயிரன்று; புலவன் முகந்து கொண்ட பொருளன்று. கரு—உடல்; சூக்குமமான உடல்.

இனித் தூல உடலை நோக்குவோம். அது சொல், சந்தம், ஓசை என மூன்று வகையாக மேற் குறிக்கப் பட்டது. சொற்கள் கருத்தின் வெளிப்பாடுகள்; கருத்தின கனிவுகள்; குணங்கள் அகத்தின் அழகு முகத்திற்றெறிவது போலப் புலவனுடைய புலமையிற் கனிந்த கருத்தினழகு அவன் சொற்களிற் புலனுகும். உயரிய கருத்துக்களைப பிரகாசிக்கின்ற சொற்களும் அக் கருத்து விசேடத்தால் தாமும் அவ்வாறு பிரகாசிக்கின்றன. சங்கத்துச் சான்ருேரான புலவர் சிலருக்கு அவர்கள் நல்ல கருத்துக்களில் ஆண்ட சொற்ருெடர்களே அவர்கள் பெயராய் அமைந்து விட்டன.

கம்பரில் எழுபது சந்தங்கள் வருகின்றன என்பார்கள். கருத்துக்களின் எழுச்சிக்குத் தக்கவாறு சந்தங்கள் மாறியமையும்.

சந்தங்கள் போலவே கருத்துக் சேற்றவாறு ஓசைகளும் வேறுபடும். அகவலோசை வேறு; வெண்பாவுக்குரிய ஓசை வேறு. இந்த ஓசை வேறுபாடுகளும் எடுத்துக்கொண்ட கருத்தைப் பற்றியவை. கருத்துக்களுக்குச் சந்தங்கள் ஓசைகளேயன்றி, சந்தங்கள் ஓசைகளுக்குக் கருத்துக்கள் அல்ல என்பது ஊன்றிச் சிந்திக்கற்பாலது. • சொல், சந்தம், ஓசை, ஆகிய மூன்றும் கருத்தின் தூலமான வெளிப்பாடுகள். அதனுல் அவை இலக்கியத்தின் தூலமான உடல் சூக்கும உடல் கரு.

நன்றி : இலக்கியவழி




கலைக்கண்ணே

வாழ்க,
உன் பெயர்!

வளர்க,
உனது புகழ்!

## யார் யாரோ கூறியவை

தொகுத்தளித்தவர் :
திரு. அ. நமசிவாயம்

"வற்ருது ஊற்றெனப் பாயும் அன்பைச் சொரிந்து எங்கும், எதிலும் தன் பெண்மையைக் காத்து என் நிழல் போல என்னைத் தொடர்ந்து வாழும் என்னருமைப் பத்தினியாளோடு சாக்கடையிலே வீழ்ந்து சாவதானுலும் என் கௌரவம் கெட்டுவிடாது. அவளது பெண்மையின் உயர்வால் நான் சிங்கேறு போலத் தலைநிமிர்த்தி நடக்கும் தகுதியைப் பெற்று விட்டேன்"

* * *

ஆலமரமொன்று தனது சுமைகளைப் பெருக்கி அல்லற் படுவதன்முன், அதன் விழுதுகளெல்லாம் ஒரே நோக்குடன் விரைந்து சென்று பூமியைத் தொட்டு அம் மரத்துக்கு ஆறுதல் கொடுக்கின்றன. ஆனுல் மக்களாகப் பிறந்து விட்ட சில துரதிஷ்டசாலிகளின் புத்திரச் செல்வங்கள் கடமையுணர்வு கடுகத்தனையுமில்லாமல் மனம் போன போக்கிலே வாழ்ந்து கெடுகிருர்கள். முன்னையது மரம். இவர்கள் மனிதர்களாம்.

* * *

ஆயிரமாயிரம் சந்தர்ப்பங்களிலே அயோக்கியத்தனங்களையெல்லாம் செய்துவிட்டு, உன் நடிப்புத்திறனுலும், பேச்சு வன்மையாலும் சாதகமான சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும் நல்லவன் போல உன்னுல் வாழ முடிகிறது.

* * *

உன் மனச்சாட்சி உன்னை எச்சரிக்கை செய்ய முற்படும்போது, உன் தவருன போக்கினை மாற்றிக் கொண்டுவிடு. அது அமைதியாய் இருக்கும்போது தான் நீயும் நல்லவனுக இருக்கிருய்.

* * *

தன் தவறுகளைத் திருத்திக் கொள்ளாமலும், தான் பட்ட சிறுமைகளுக்கு அவமதிப்புக கொள்ளாமலும், அலட்சியமாய் வாழும் ஒருவன், பிறரது குறைகளை மட்டும் பல கோணத்திலிருந்து பார்த்து விமர்சிப்பதேன்? தன் குறைகளை மறைத்துவிட அல்லது மறந்துவிட அவன் கையாளும் நரித்தந்திரம்தானே இச் செயல்? இதுவும் ஒரு அதிசயந்தான்.

இப்பத்திரிகை, சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பெற்று, யாழ்ப்பாணம் டேவிட் வீதி 28ஆம் இலக்கத்திலுள்ள திரு. ச பெனடிக்ற் அவர்களால் வெளியிடப்பெற்றது. ஆசிரியர் : புலவர் ம. பார்வதிநாதசிவம். 23-7-73.